1301

136

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

இது

'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும்

பொதுநிலைக்கழகத்தின்

அரிய பெரிய செந்தமிழ்விளக்க வெளியீடு

பகு, கங.] அக்ஷய௵ தை௴ மாசி௴ [இதழ், அ, கூ.

### பொருளடக்கம்

*மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி.*

(The Age of Saint Manickavachakar, the third part—reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.)

OFFICE OF THE REGISTRAR

4-JUN1927

MADRAS

ஆசிரியர்:

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

சமரச சன்மார்க்க நிலையகுரு,

பல்லாவரம்

பல்லாவரம், சமரசசன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப்பட்டது;

2nd June, 1927.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

# திருப் பேரூர்

## திருச் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயம், சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் ௧௧-வது ஆண்டு நிறைவுவிழா

இவ்வாண்டு விழா, கோயமுத்தூருக்கு மூன்று கல் தொலைவிலுள்ள திருப்பேரூரின்கண் அக்கய ஆண்டு மாசித் திங்கள் ௬, ௭, ௮-ஆம் நாட்களுக் கேற்ற ஆங்கில 17, 18, 19—2—1927-ஆம் நாட்களில் எல்லாம்வல்ல சிவபெருமான் திருவருளாலும், மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் அவர்களின் அருளுதவியாலும், இனிது நடந்தேறியது. நடைபெற்றதின் சுருக்கம்:—

'சத்வித்யா சன்மார்க்க சங்கத்'தின் வரவேற்புக் கழகத்தார் ௸ ஆண்டு விழாவிற்குத் தலைமைபூண்டு இனிது நடத்துமாறு சைவசித்தாந்த ஆசிரியரும், தமிழ்நாட்டுத் தனித் தமிழ்ப்புலவரும், பொதுநிலைக்கழகத் தலைவரும், முன்னே சென்னை கிறிஸ்டியன் காலேஜில் தமிழாசிரியரும் ஆன பல்லாவரம் மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகளை வேண்டிக்கொண்டனர். அவ் வேண்டுகோளை அடிகளும் ஏற்றுக்கொண்டார்கள்.

அடிகள் 15—2—27-ஆம் நாள் மாலை பல்லாவரத்தினின்றும் புறப்பட்டு, இரண்டாம் வகுப்பு வண்டியில் கோயமுத்தூர் ரயில்வே ஸ்டேஷனிற்கு 16-ஆம் நாள் காலை 9 மணிக்கு வந்தார்கள். அங்கு அடிகளை வரவேற்பதற்காகப் பேரவாவுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த வரவேற்புக்கழகத்தாரும், மற்றவர்களும் அடிகளுக்கு வண்டியிலேயே நறுமணம் வீசும் அழகிய ரோஜாமாலையொன்றனைச் சூட்டினர். உடனே அடிகள் புகைவண்டியி லிருந்து இழிந்தனர். அப்போதும், முன்னையதைவிட அழகும், மணமும் உடைய வேறு மாலை யொன்றனையுஞ் சூட்டினர். பின்னர் அடிகள் பேரூருக்கு எழுந்தருள்வதற்காக அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார்காரிலேறிச் சென்று திருப்பேரூரில் திருச் சாந்தலிங்க சுவாமி மடாலயத்தாராலும் மிக அழகாகவும், சிறப்பாகவும் வரவேற்கப்பட்டனர். அதன்பின் அடிகள், தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த அழகும், வசதியுமுள்ள பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

17—2—27-ஆம் நாள் வியாழக்கிழமை பகல் 1 மணிக்கு மேற்படி சங்கம் நடைபெறுதற்காகக் கட்டப்பட்டிருந்த அழகிய பந்தலில் ஆயிரத்தைந்நூறு மக்கள் அடிகளின் இனிய நல்லுரையைக் கேட்பதற்காகக் கூடியிருந்தனர். உடனே அடிகளும், மக்களின் அளவிலாத மகிழ்ச்சிக் கிடையே தலைமை பூண்டனர். அதன்பின் தமிழ்மறை ஓதப்பெற்று வரவேற்புக் கழகத்தாரால் அடிகட்கு ஓர் இனிய வரவேற்புத்தாள் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் அடிகள் தம் இனிய சொற்களால் உயர்ந்த பொருள்களை மிகத் தெளிவாக $\frac{1}{2}$ மணிநேரம் வரையில் திருவாய்மலர்ந் தருளினார்கள். பின் ஸ்ரீலஸ்ரீ கருணாலய சுவாமிகளால், 'திருத்தொண்டர்பணி' யென்னும் விரிவுரை கூறப்பட்டது. பின், திருச்சிராப்பள்ளி சைவசித்தாந்தசபை காரியதரிசி சைவத் திருவாளர் அ. சரவண முதலியாரவர்களால் 'அழுதடி யடைந்த அன்பன்' என்பது கேட்போர் நெஞ்சம் உருகும்படி கூறப்பட்டது. அதன்பின், பாடசாலை டெபுடி இன்ஸ்பெக்டரும், சைவசமயத்தை இப்போதே உலகம் முழுவதிலும் பரவும்படி செய்யவேண்டுமென்னும் பேரவாவும் பெருமுயற்சியுமுடையவருமான சைவத் திருவாளர் சச்சிதானந்தம் பிள்ளையவர்களால் 'தாயினும் நல்ல சங்கரன்' என்பது பேரன்புடனும், ஊக்கத்துடனும், கேட்போருக்கு உணர்ச்சி யெழும்படி கூறப்பட்டது. அதன்பின் தலைவரவர்களால் கேட்போர் நெஞ்சங் குளிர்ந்து வியப்படையும்படி செவ்விய பொருள்கள் $1\frac{1}{2}$ மணிநேரம்வரை முடிவுரை கூறப்பட்டு அன்றைப் பேரவை நிறைவேறியது.

மீண்டும் இரண்டாம்நாள் 18—2—27 வெள்ளிக்கிழமை பகல் இரண்டு மணிக்கு இரண்டாயிரத்தைந்நூறு மக்கள் சூழ்ந்திருக்கத் தமிழ்மறை ஓதுத

விட்டகன்று இதன் எல்லைப்புறங்களில் இருக்க" என்று வைத மையால் அம்மரபினரே ஆந்திரர், புண்டரர், சபரர், புளிந்தர், மூதிபர் ஆனமையும், தஸ்யுக்களிற் பெரும்பாலார் விசுவாமித்திரர் வழித்தோன்றினமையும் ஐதரேயபிராமணம் ஏழாம் இயலில் (கஅ-முதல் கஅ-வரையில்) தெளித்துரைக்கப்பட் டிருத்தல் காண்க. இதனால், ஆரியப்பார்ப்பனர் தாம் பொருண்மேல் வைத்த பேரவாவால் எத்தகைய கொடுந்தொழிலுஞ் செய்தற்குப் பின்இடையாராதலும், தமிழ்ச்சான்றோர் இடருற்ற ஆரியர்மாட்டும் பேரிரக்கமுடையராய் அவர்க்குப் பேருதவி புரிவாராதலும், ஆரியரல்லாத தஸ்யுக்களெல்லார்க்கும் பிறப்பிடமாவார் விசுவாமித்திர மரபினரேயாதலும், தஸ்யுக்களிற் சிறந்த 'பரதர்க்கு' விசுவாமித்திரரே முதற்குரவராதலும், ஆரியர் நேரத்திற்குத் தக்கவாறு தம்மவரல்லாதாரை ஒருகால் தஸ்யுக்களென இகழ்ந்தும் பிறிதொருகால் க்ஷத்திரியர் வைசியரெனத் தம்மோடு இனப்படுத்திப் புகழ்ந்துந் தமிழரை ஏமாற்றும் நீராதலும் இனிது விளங்குகின்றனவல்லவோ? இன்னும், விசுவாமித்திர மரபினர் உயர்ந்த மெய்ப்பொருளுணர்ச்சி யுடைய ரென்பதூஉம், தாம் அரிதின் உணர்ந்த மெய்ப்பொருள்களை, அவையுணராத ஆரியமரபின் வழிவந்த சுநஸ்ஸேபனுக்கு அவர் அறிவுறுத்தினரென்பதூஉம், விசுவாமித்திர மரபினரான காதினர்க்கு ஆரியவேதங்களின் வேறாகத் தெய்வத்தன்மை பொருந்திய மற்றொருவேதம் இருந்ததென்பதூஉம்* அவ் ஐதரேய பிராமணமே நன்கு உரைதருகின்றது. இவ் விசுவாமித்திர மரபினர்க்குரிய தெய்விகவேதமே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளியல்புகளையும், சிவபிரானையும், அவன் முனைத்து விளங்கும் முத்தீ வழிபாடுகளையும் உணர்த்தும் **பண்டைத் தமிழ்வேத** மாதலுந் தானே பெறப்படும்.

இன்னுந், தமக்கு உதவியுந் துணையுமா யிருந்து, தாஞ் செய்துபோந்த உயிர்க்கொலை வேள்விகளை நடத்திவந்த வரை

---

* "தைவ வேதேச காதிநாம்" ஐதரேய பிராமணம், எ, கஅ.

யில் தமிழரை க்ஷத்திரியராக வைத்துத் தம்மோடினப்படுத்திக் கொண்டாடிய ஆரியர், பின்னர்த் தம்மை அவர் ஒருபொருட் படுத்தாரானவழி, உடனே அவரை இழிந்தவராக்கிவிட லாயினர். இது, "வேள்வியாற்றுமையாலும் பிராமணரோடு உறவு கலவாமையாலும், க்ஷத்திரிய மரபினரான பௌண்டரகர், ஒட்ரர், திராவிடர், காம்போஜர், யவனர், சகர், பாரதர், பல்லவர், சீனர், கிராதர், தரதர், கசர் என்பார் வரவரச் சாதிப்புறம்பான விருஷலரின் நிலையை யடைந்தனர்" என மநுவும் (௧0, ௪௩, ௪௪), மாபாரத அநுசாசன பருவமும் (௨௧0௩) உரைக்குமாற்றால் நன்குணரப்படும். மேற்குறித்த தமிழரச மரபினர் அனைவரையும் ஆரியர் 'தஸ்யுக்கள்' எனவே கொண்டு இகழ்ந்தன ரென்பதற்கு, மாபாரத துரோணபருவம் (௭௪௭), "ஆயிரக் கணக்கான காம்போஜர், சகர், சபரர், கிராதர், வர்வரர் என்பாரின் குருதியினாலுந் தசையினாலும் இவ் வழகிய நிலத்தைச் 'சைநேயன்' சேற்றுத்திரளை யாக்கினன்; கத்தரிக்கப்பட்டுத் தலையில் மயிர் இலராயினும் நீண்ட தாடிமயிரினை யுடைய தஸ்யுக்களின் தலைகளாலும், அவர்தம் முடிகளாலும் மூடுண்ட நிலம், இறகிழந்த பறவைகளால் மூடுண்ட நிலம்போன் றிருந்தது." எனக் கூறுதலே சான்றாம். இதனோடொப்பவே அரிவம்சமும் (௭௪௩), "சகர், யவனர், காம்போஜர், பாரதர், பல்லவர், கோலிசர்ப்பர், மகிஷர், தார்வர், சோழர், கேரளர் முதலிய அனைவரும் க்ஷத்திரியராகவே யிருந்தனர்; ஆனால், வசிட்டருடைய சொல்லால் தூண்டப்பட்ட சிறந்த சகரவேந்தனால் அவர்கள் தமக்குரிய வாழ்க்கை யுயர்வினையுஞ் சமய நிலையினையும் இழக்கலாயினர்" என உரைத்தல்காண்க. மேலேகுறித்துக் காட்டப்பட்ட இனத்தவர் பற்பலரும் பண்டைத் தமிழ்வகுப்பினராதலும், ஆரியர் இங்கு வருதற்கு முன்னரே இந் நாட்டின் பற்பல பகுதிகளிலுங் குடியேறி அவற்றை அரசாண்ட அத் தமிழ்மக்கள் தம்பால்வந்து அடைக்கலம் புகுந்த ஆரியர் தம் சூழல்களிற் சிக்குண்டு அவர்தஞ் சொற்படி நடந்து வந்த

வரையில் அவர் தம்மை 'க்ஷத்திரியர்,' 'வைசியர்' எனப் பெயர் வைத்துச் சீராட்டிவந்த ஆரியர், பின்னர்த்தம் தீவினைச் செயல்களைக் கண்டு தம்மை அத் தமிழ்மக்கள் அருவருத்துவிட்டவுடனே அவர் தமக்கெல்லாம் 'தஸ்யுக்கள்' என ஓர் இழிந்த பெயர் வைத்து அவரை ஒருங்கே இழித்துரைக்கலானதும், இவ்வாறுகத் தமிழரை இழித்துரைக்குமாறு ஆரியரை ஏவினவர் ஆரியர்க்குக் குருவான வசிட்டரேயாதலும் மேற்காட்டிய வடமொழி நூல்களின் உரைகளினுலேயே நன்கு தெளியப்படுகின்றன அல்லவோ?

இனி, இஞ்ஞான்று தம்மைப் பார்ப்பனரென உயர்த்துப் பேசிக்கொள்வாரும், அப் பார்ப்பனரைப் பின்பற்றி யொழுகி அவ்வாற்றுல் தமக்கு உயர்வு தேடிக்கொள்வாரும் ஏனைப் பொதுமக்களை இழிந்த நிலைமைக்கட்படுத்து நடத்தும் இயல்புகளை உற்றுக்காண வல்லார்க்குப், பண்டைக்காலத்துப் பார்ப்பனரின் ஒழுகலாறுகளும் இவர்தம்மோடொத்த இயல்பினவாம் உண்மை தெற்றெனப் புலனுகா நிற்கும். மேல்நாட்டிலிருந்து போந்து இந்நாட்டை அரசாளும் ஆங்கில நன்மக்களின் மொழியையும் அவர்தம் நடையுடை வழக்கங்களையும் பின்பற்றி அவர்பாற் பல சிறப்புக்களையும் பெற முந்துவோர் பார்ப்பனரேயாவர். ஏனைப் பொதுமக்களின் வேறுகத் தம்மைப் பிரித்து உயர்த்துதற்கும், செல்வவாழ்க்கையிற் றலைமைபெற்று வாழ்தற்கும் ஏதுவாவது ஆங்கில மக்களின் நாகரிகத்தைத் தழுவி யொழுகுதலே எனக் கண்டுகொண்ட நாள் தொட்டுப், பார்ப்பனர் பெரும்பாலும் ஆங்கிலமொழியையே கற்றலும், அதனுலேயே உரையாடுதலும், ஏனைத் தமிழரையுந் தமிழையுஞ் 'சூத்திரர்,' 'சூத்திர பாஷை' என இகழ்தலுஞ் செய்தல் எவரும் உணர்ந்ததேயாம். இங்ஙனமே பண்டைநாளி லிருந்த பார்ப்பனருந், தம்மைத் தமிழரின் வேறுக உயர்த்துதற்கு வாயிலாவது ஆரியமொழியையும் ஆரிய ரொழுகலாற்றையும் பின்பற்றுதலே எனக் கண்டவளவானே ஆரிய மொழியைக்

கற்று ஆரிய வழக்குகளைத் தழுவித், தமிழரெல்லாரையுந் 'தஸ் யுக்கள்' எனவுந், தமிழரின் மொழியை 'மிலேச்சமொழி' என வும் இகழ்ந்துரைப்பா ராயினர். இஞ்ஞான்றைப் பார்ப்பனர், தமிழரிற் சிறந்த அரசரையும் செல்வ வாழ்க்கையிற் பெரிய வணிகரையும் அவ்வாறிகழ்ந் தொதுக்குதல் ஆகாமல் அவரைத் தாம் சார்ந்து பிழைக்கவேண்டியிருத்தல் கண்டு, அவரை 'க்ஷத் திரிய வைசிய' வகுப்பின்பாற் படுத்துக் கொண்டாடுதல் போல வே, பண்டைப் பார்ப்பனருந் தமிழ அரசரையும் வணிகரை யும் 'க்ஷத்திரிய வைசிய' வகுப்பின்பாற்படுத்துக் கொண்டாட லாயினர். திருவனந்தை அரசர், மைசூர் அரசர் முதலாயினாரை 'க்ஷத்திரியர்' எனவும், நாட்டுக்கோட்டை வணிகரை 'வைசியர்' எனவுங் கொண்டாடி, அவர்பாலுள்ள பொருட்டிரளையும் பிற நலங்களையும் இஞ்ஞான்றைப் பார்ப்பனர் கொள்ளை கொண்டு நுகர்தல் காண்க. இவர்தம் பாராட்டுரையில் மயங்கி இவ்வர சரும் இவ் வணிகருந் தம்மை அப்பார்ப்பனருக்கு அடுத்தநிலை யில் உயர்ந்தவராகக் கருதி வைத்துக்கொண்டு தம் மினத்தவ ரான ஏனைத் தமிழ்மக்களெல்லாரையுஞ் 'சூத்திரர்' என இகழ்ந் துரைத்து ஒழுகுதல்போலவே, பண்டைத் தமிழ் மன்னரும் வணிகரும் பார்ப்பனர்தம் பொய்ப்பாராட்டுரையில் வீழ்ந்து தம் மினத்தவரையுந் தமிழையும் புறம்பழித்து வந்தனர். இன்னும் இஞ்ஞான்று, பார்ப்பனர்தம் பாராட்டினையே பெரிதாகக் கரு திப் பிழைப்பா ரெல்லாருந், தம்மோடொத்த தமிழர்பாற் சிறி தும் உறவுகலக்க இசையாராய், அப் பார்ப்பனர்பாலும் உறவு கலத்தல் இசையாதேனும் அவர்தம் புறக்கடை வாயிலிற் காத் திருந்து அவர் வீசியெறியும் எச்சிற்சோற்றை யுண்டு, அப் பார்ப்பனர்தந் தெய்வத்தன்மையினையும் அவர்தம் ஆரியமொழி நூல்களின் தெய்வத்தன்மையினையும் அப் பார்ப்பனரினும் பார்க்க உயர்த்துப் பேசித், 'திருநாவுக்கரசர்,' 'மெய்கண்ட தேவர்,' 'சேக்கிழார்' முதலான அருட் பேராசிரியர்களையும் பார்ப்பனர் கூறுஞ் சூத்திரவகுப்பின்பாற் படுத்து, அவர் அரு

ளிச்செய்த அருள்நூல்களையும் வடமொழியி லிருந்து கடன் கொளப்பட்டனவாக மொழிந்து, உண்மைக்கு மாறான பொய்ப் படுகுழியில் வீழ்ந்து அலகைபோல் அலறுதல்போலவே, அஞ் ஞான்றைப் பார்ப்பனர்தம் பாராட்டினை விழைந்த தமிழருங் கோடரிக்காம்பை யொப்பத் தம்மினத்தவர்க்குந் தமது தமிழ் மொழிக்கும் இழைத்த தீங்குகள் அளப்பில. தமிழர்க்குந் தமிழ்க்குந் தமிழ்நாட்டுக்கும் ஆரியரால் விளைந்த பொல்லாங்கு களைவிடத், தம்மை அவ் ஆரிய இனத்திற் சேர்த்துக்கொண்ட பார்ப்பனராலும், அவர் தம்மால் ஒதுக்கப்பட்டிருந்தே அவர் தம் பாராட்டுரையினை மேலதாகக் கருதி அவர் வழிச் சார்ந் தொழுகிய தமிழராலும் விளைந்த பொல்லாங்குகளே மிகக் கொடியனவாமென்று உணர்ந்துகொள்க. இஞ்ஞான்று ஆரி யர் என ஒரு தனிவகுப்பார் காணப்பட்டிலரேனுந், தமிழரி லிருந்தே பெருந்தொகையினர் ஆரியராய் மாறிப் பார்ப்பனப் பெயர் புனைந்து வடமொழி நூல்களை ஓதித், தமிழர்க்குந் தமிழ் மொழிக்குந், தமிழ்த்தெய்வக் கொள்கைக்கும் மாறாய் நின்று வருதல்போலவே, அஞ்ஞான்றுந் தமிழ்வகுப்பினரும் பிறரும் பெருந்தொகையினராய் ஆரியர் ஒழுகலாறுகளைக் கைக்கொண் டு வடநூல்களைப் பயின்று தமிழ் வழக்குக்கு முழுமாறாய் நின் றனர் என்க. இப் பெற்றியினரால் எழுதப்பட்டனவே வட மொழியில் உள்ள பல பிராமணங்கள், கல்ப சூத்திரங்கள், மீமாஞ்சை, பொய்க்கதை பொதிந்த புராணங்கள் முதலாயின வாகுமென்று உணர்ந்துகொள்க. இனி, இஞ்ஞான்றும் பார்ப் பனர் கட்டிய பொய்வழக்குகளின் பெற்றி தேற்றி, அருளொ ழுக்கமாட்சியும் முழுமுதற்கடவுள் வழிபாடுந் தெருட்டுவார் உளராதல் போலவே, அஞ்ஞான்றுங் குடி கொலை மலிந்த ஆரிய வேள்வியின் தீவினைப்பெற்றியுஞ் சிறுதெய்வவணக்கச் சிறுமை யுந்தேற்றி அன்பும் அருளும் பெருகச்செய்த தமிழ்ச்சான்றோ ரும் உளர். அவர் அருளிச்செய்தனவே: முத்தீ வேள்வியும் உருத்திர வழிபாடுஞ் சிறந்தெடுத்துக்கூறும் இருக்கு எசுர் சாம

அதர்வவேதப் பதிகங்கள் சில பலவும், உண்மைவழா உபநிடதங்களும், சாங்கிய யோக வைசேடிக நையாயிக வேதாந்தசூத்திரங்களும், மற்சம் வாயு முதலான சில புராணங்களும், பௌட்கரம், மிருகேந்திரம் முதலான சில சிவாகமங்களும் பிறவுமாம். இஞ்ஞான்றும் ஆங்கிலமொழியைக் கற்று அதன்கண் நலங்கிளரும் நூல்கள் பல இயற்றுந் தமிழர்களும் ஏனை வகுப்பினரும் உளராயினாற்போலவே, அஞ்ஞான்றும் ஆரியமொழியைக் கற்று அதன்கட் பயன்பெருகும் நால்வேதப்பதிகங்களும் உபநிடதம் முதலிய அறிவுநூல்களும் இயற்றின தமிழ்ச்சான்றோர் பலரும் உளரானார் என்று தெளிக. இஞ்ஞான்றை ஆங்கிலமொழியில் ஆங்கிலரும் ஆங்கிலரல்லாத பிறரும் இயற்றிய நூல்களில் அவ்வவர் இயற்கைகளும் அவ்வவர்க்குரிய கோட்பாடுகளும் பிரித்தறியலாம்படி விளங்கிக் கிடத்தல் போலவே, அஞ்ஞான்றை ஆரியமொழியுளும் ஆரியரும் அவரைப் பின்பற்றினாருந் தமிழ்ச்சான்றோரும் ஏனைப் பிறரும் இயற்றிய பதிகங்களும் நூல்களும் அவரவர்க் குரிய இயற்கையுங் கோட்பாடுகளும் பொருந்தப் பெற்றனவாய், நுண்ணறிவினார்க்கு இவை ஆரியர் இயற்றின, இவை தமிழர் இயற்றின, இவை ஏனைப் பிறர் இயற்றினவென்று பிரித்தறியலாம்படி விளங்கிநிற்கு மென்க. எனவே, ஆரியமொழியில் தமிழ்ச்சான்றோர் அருளிச்செய்த பதிகங்களும் நூல்களும் விரவி நிற்கும் இயல்பு ஆராய்ச்சியறிவுடையார்க்கெல்லாந் தெற்றென விளங்கிக்கிடக்கு மென்க. பண்டுதொட்டே பல்வேறு நாடுகளிலுள்ள பல்வேறு மக்கட் பிரிவினருந் தத்தம் நாடுகளை விட்டகன்று ஏனை நாடுகளில் உள்ள ஏனை மக்களோடு கலந்துறவாடி வந்தனராகலின், அவர் தம்முள் ஒரு வகுப்பினர் ஏனை வகுப்பினரின் நடையுடை வழக்கங்களைப் பின்பற்றி யொழுகுதலும் அவரது மொழியைத் தாங் கற்றலும் அம்மொழியில் தாம் நூல்கள் இயற்றுதலும் இயற்கையாய் நிகழப் பெறுமாறு வரலாற்று நூலுணர்ச்சி யுடையார்க்கெல்லாம் இனிது விளங்கிக்கிடப்பதொன்றேயாம். ஆகவே, தமிழ்ச் சான்

ன்றோர் அருளிச்செய்த பதிகங்களும், நூல்களும், அவர் தங் கோட்பாடுகளும் ஆரியமொழியிற் புகுந்து நிலைபெறலானது ஒரு புதுமையன்றென ஓர்ந்துகொள்க.

என்றிதுகாறும் விளக்கியவாற்றாற், பிறப்பு இறப்பு இல்லா அருளொளி வடிவினனாகிய எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள், எத்துணையும் பெரிய தனது முழுமுதற்றன்மையை எத்துணையுஞ் சிறிய எம்மனோர் ஒருவாற்றானாயினுங் கண்டு வழிபட்டு உய்தற்பொருட்டு, எம்மனோர் கண்கட்குப் புலனாம் நெருப்பொளியில் விளங்கித் தோன்றிநிற்கும் உண்மையினை முதன்முதற் கண்டறிந்தோர் **பரதர்** என்னும் பண்டைத் தனித் தலைமைத் தமிழ்ச்சான்றோரேயாவ ரென்பதூஉம், அவ்வுண்மைக்கு மாறாகாமலே இருக்குவேதம் அனல்வழிபாட்டை ஓதும் இடங்களி லெல்லாம் அதனைக் கண்டறிந்தவர் 'பரதரே' ஆவர் எனவும், அதனால் அனற்கடவுளும் அக் கடவுட்கு உயிராய் விளங்குஞ் சிவபிரானும் 'பாரதன்,' 'பரதன்' எனப் பெயர்பெறுவ ரெனவுந் தெளியக் கூறுவதாயிற் றென்பதூஉம், தீப்பிழம்பின் வாயிலாக எல்லாம்வல்ல முதல்வனை நேரே கண்டு வணங்கும் மாப்பெரு வணக்கத்தை முதன்முதற் கண்டவர் தென்றமிழ் நாட்டின்கட் பண்டிருந்த தமிழ்ச் சான்றோரேயாதல் பற்றியே தீக்கடவுள் வணக்கத்தைத் தென்றிசைக் குரியதாக்கி அதனைத் 'தக்ஷிணாக்கினி' என வடநூல்களெல்லாம் ஒருமுகமாக நின்று ஓத்துரைப்பவாயினவென்பதூஉம், தீப்பிழம்பானது 'ஞாயிறு,' 'திங்கள்,' 'தீ' என முத்திறப்பட்டு நிற்றலின் அம் மூன்றினும் விளங்கித் தோன்றும் இறைவனை வழிபடும் வேள்வியினையும் முத்திறப்படுமாறு வைத்து வேட்டு வந்தவர் இமயம்முதற் குமரியீறாகக் கிடந்த இப் பரதநாட்டின்கட் பண்டுமேவிய தமிழந்தணரேயாவ ரென்பதூஉம், விசுவாமித்திரர் முதலான தமிழந்தணர் வேட்ட முத்தீ வேள்வி சிவபிரான்மேற்றாய்க் குடி கொலை இல்லா அருளொழுக்க வழிபாட்டின் பாலதாதல் பற்றியே, அம் மெய்ம்மையினை ஓதாதுணர்ந்த அருளாசிரியரான திருஞானசம்

பந்தப் பெருமான் அதனை "வேதவேள்வி" என மீக்கூறுவா ராயினரென்பதூஉம், தமிழந்தணர் வேட்ட முத்தீ வேள்வியின் நுண்பொருள் மறைநுட்பம் அறியப்பெறாத பருப்பொருளறி விஞரான ஆரியப் பார்ப்பனர் தாமும் அவர்போல் வேள்வியாற் றப் புகுந்து தமக்குரிய ஊனையுங் கள்ளையும் படைத்து இந்தி ரன் முதலான சிறுதெய்வங்களை வணங்கி வெறியாட் டயர்ந்து வந்தமை கண்டே சைவசமய ஆசிரியரான திருநாவுக்கரசு நாய ஞர் அவரையும் அவர் செய்துபோந்த வழிபாடுகளையும் வருந்தி இகழ்ந்துரைப்பா ராயின ரென்பதூஉம், தமிழ்ச் சான்றோர் வேட்ட முத்தீ வழிபாட்டினையே பண்டைத் தமிழ்ப் பேரா சிரியரான தொல்காப்பியனார் "கொடிநிலை கந்தழி வள்ளி" என் னும் பொருளதிகாரச் சூத்திரத்திற் கடவுள்வாழ்த்தின்பாற் படுப்பாராயின ரென்பதூஉம், முத்தீயும் இறைவனுக்குத் திரு மேனிபோல் விளங்குவதோடு அவற்கு மூன்று விழிகள்போல வுங் காணப்படுதல் குறித்தே இறைவன் அவை தம்மைக் கண் களா உடைய 'முக்கண்ணன்' எனப் பெயர்பெறுவானாயின னென்பதூஉம் இனிது பெறக்கிடந்தமை கண்டுகொள்க. ஆசி ரியர் தொல்காப்பியனார் குறித்த முத்தீ வழிபாடு, குடி கொலை முதலான குற்றங்கள் உடையதல்லாமை பற்றியே அதனை "வடு நீங்கு சிறப்பு" வாய்ந்ததென அவர் ஓதினார். அவர் அதனை அவ் வாறோதவே, ஏனை ஆரியர் செய்துபோந்த வேள்விகளெல்லாங் குடி கொலை முதலான குற்றங்கள் உடையவாதலுந் தானே பெறப்படும். அதுநிற்க.

இனிப்,பண்டைக்காலத்துத்தண்டமிழ்அந்தணர்கொண்ட தவவடிவம் முழுமுதற்கடவுளின் திருவருளுருவத்தோடு ஒத்த இயல்பிற்றாதல் காட்டப்புக்க முறையில், இறைவற்கு ஒளி யுடைப் பொருள்கள் மூன்றும் மூன்று கண்களாக வைத்து உருவகப்படுத்தப்பட்ட உண்மை இத்துணை விரிந்தமையின், எஞ்சியவற்றைச் சுருக்கமாக எடுத்து ஆராய்ந்து காட்டுதும்.

இறைவன் ஞாயிற்றின்கண் முனைந்து விளங்குவோனாக லின், அஞ்ஞாயிற்றினை அவற்கொரு திருமுகமாகக் கொண்டு, கீழ்பால் எழூஉம் ஞாயிற்றின் உச்சியிலும் மேல்பால் விழூஉம் ஞாயிற்றின் உச்சியிலும் வானின்கட் படர்ந்து காணப்படும் முகிற்குழாங்க ளெல்லாங் கதிரவன்றன் செவ்வொளி தோயப் பெற்று அவற்குச் செக்கர்ச் சடைபோற் றோன்றுதல் பற்றி, அவைதாமே அவற்குச் செஞ்சடைக் கற்றைகளாக வைத்து நுவலப்பட்டன. இதனானன்றோ இறைவற்குச் 'சடையன்' என்னும் பெயருந் தொன்றுதொட்டு வழங்கிவராநிற்கின்றது.

இனி, வானின்கட் படர்ந்துள்ள முகிற்குழாங்கள் அத் துணையும் நீராவிப்படலங்களே யாகையாலும், அப் படலங்கள் தம்மேற் குளிர்ங்காற்றுவீசியவளவானே வானினின்றும் மழைத் துளிகளாய்க் கீழ்இறங்குகையாலும், அம் முகிற்குழாங்களை இறைவற்குச் சடைக்கற்றைகளாகக் கூறிய தமிழ்ச் சான்றோர், அம் முகிற்குழாத்திலுள்ள தூயநீரை அச் சடைக்கற்றையில் வைகிய கங்கை நீராகவும், வானினின்று மலைமேல் இறங்கி நிலத்திலிழியும் அம் மழைநீரை இறைவன்றன் சடைமுடியி னின்றும் பனிமலை (இமயமலை) யில் வீழ்ந்து கீழ்இழியுங் கங் கையாறாகவும் வைத்து உருவகப்படுத்தி யுரைப்பாராயினர்.

இனி ஒருநாட்காலையிற் கீழ்பால் எழூஉம் ஞாயிறு புதிய இளமைச் செவ்வி வாய்ந்ததாய் இருத்தலானும், கீழ்கடலின் எல்லைப்புறத்தினின்றும் எழுந்து ஞாயிறு மேல்இவருங்கால் அக் கடல்நீரின் மேற்பரப்பெல்லாம் மயிலின் நிறம்போல் நீல மும் பசுமையுங் கலந்து ஒளிருதலானும், அவ் விடியற்காலை ஞாயிற்றின்கண் விளங்கித்தோன்றும் இறைவற்கு 'இளையோன்' என்று பொருள்படும் முருகன் என்னும் பெயரை வைத்து, அஞ்ஞாயிற்றின்கீழ்ப் பச்சென்று காணப்படுங் கடற்பரப்பினை அவன் ஊர்ந்துசெல்லும் மயிலாக வழங்குவாராயினர். பண் டைத் தமிழ்மக்களாகிய 'பரதர்' என்பார் கடற்கரை யடுத்த இடங்களில் முதன்முதல் வைகி உயிர்வாழ்ந்தனர் என்பதை

மேலே காட்டினம். அவ்வா றுயிர்வாழ்ந்த மிகப் பழையகாலத்தேதான் அவர் தாம் வணங்கிய முழுமுதற்கடவுளை முருகன் என்னும் பெயரான் வழங்கினர். காலை ஞாயிற்றின்கட் கட்புலனாய் விளங்கிய முதல்வனை இளையனெனக்கொண்டு வணங்கிய அவர், அதன்பிற் பொழுதுமுதிர்ந்த மாலைஞாயிற்றின்கட் டோன்றிய இறைவனை முதியோன் எனக்கொண்டு, அங்ஙனங் கொள்ளினும் அவ்விருவரும் ஒருவரேயாதல் தெரிந்து, அவர் தம் ஒற்றுமை தெரிப்பான் வேண்டி அம்முதியோன் 'முருகன் தாதை'யே யாவன் எனவும், மிகவுஞ் சிவந்த நிறத்ததாய் விளங்கும் அம்மாலைஞாயிற்றின்கண் வைகுவானான அப்பெருமானுஞ் சிவன் எனுஞ் சிவந்த நிறத்தினனே யாவனெனவுங் கடைப்பிடிப்பா ராயினர். இவ்வுண்மை அறிவுறுத்தற் பொருட்டே "சிவன் எனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்னுந் திருநாவுக்கரசு நாயனார் அருண்மொழியும் எழலாயிற்று. அது நிற்க.

இனி, மாலைஞாயிற்றின் மேல்பா லெல்லையெல்லாம் மிகச் சிவந்து சுடருஞ் செக்கர்வானத்தின் மட்டுமே மூன்றாம்பிறை இயற்கையாய்த் தோன்றுதலின், அதனையே உருவகவகையாற் சிவபிரான்றன் செஞ்சடைக்கண் வைகும் மூன்றாம்பிறையாக வைத்துத் தமிழ்ச்சான்றோர் உரைப்பாராயின ரென்பது.

இனித், தீயானது தான் பற்றியபொருளை முழுதும் எரித்துச் சாம்பராக்குதற்குமுன், அப் பொருளின் மேற்சுற்று முழுமையும் எரித்துச் சாம்பராக்கி அச் சாம்பர் மேலே பூத்திருப்ப உள்ளே தான் செந்தணலாய் முறுகிவிளங்கும் இருவகை இயல்பே, இறைவன்றன் திருமேனிமிசைப் பூத்து ஒளிருந் தூய வெண்ணீறாகவும் அதனுட் சிவந்து மிளிரும் அத் திருமேனியாகவும் வைத்து உருவகப்படுத்தப்பட்டது. இவ் அரிய உருவகத்தின் வனப்பு,

"துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு

பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்கு மார்பினனே" என்று (திருவாசகம், அருட்பத்து, ரு) மாணிக்கவாசகப் பெருமான் இசைத்த செய்யுளிற் கனிந்துநிற்றல் காண்க.

இனி, எண்ணிறந்த உயிர்களை யெல்லாம் இறுகப்பற்றி வருத்திவரும் ஆணவம், மாயை, வினை என்னும் மும்மலங்களையுங் குத்திக் கல்லி நீக்கவல்ல பேராற்றல் இறைவன் ஒருவனிடத்தே மட்டும் உளதாகலின், அம் மும்மலங்களையும் அகத்தே முத்திறமாய் நின்று தொலைக்கும் அப்பேராற்றலே, புறத்தே காணப்படுங் கழுக்கடை அல்லது முத்தலைவேல் (சூலம்) ஆக வைத்து உருவகப்படுத்தப்பட்டது. இவ்வுண்மை,

"கொற்றேன் மொழிக் கிள்ளாய், கோதில் பெருந்துறைக்
மாற்றாரை வெல்லும் படைபகராய்—ஏற்றார் [கோன்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை" என்னுந் திருவாசகத் திருப்பாட்டினால் (திருத்தசாங்கம், எ) உணர்த்தப்பட்டமை காண்க.

இனி, எல்லாத் துன்பங்களும் பிறத்தற்கிடமான ஆணவமலத்தின் குறும்புக்கு அடையாளமாவது புலியேயாகலின், அம் மலத்தின் செயலை ஒடுக்கிநிற்கும் இறைவனது நிலையே, புலித்தோலையுரித்து உடுத்திருக்கும் நிலையாகவைத்து உருவகப்படுத்தப்பட்டது. இங்ஙனமே இறைவன் றிருமேனிமிசை யடையாளங்களாக மொழியப்படுவன வெல்லாம், அரும்பெரு நுண்பொருள்களை உள்ளடக்கிய உருவக வமைப்புகளே யாகும்; அவையெல்லாம் ஈண்டெடுத்துக் காட்டலுறின் இது மிக விரியும். இதுகாறுங் காட்டியவளவே ஈண்டைக்குப் போதுமாகலின், இவற்றை இத்துணையின் நிறுத்தி மேற்செல்வாம்.

இறைவன் றிருவுருவ அடையாளங்களாக வைத்து மேலே காட்டியவாறு உருவகஞ்செய்து, எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளை ஓர் உருவத்திருமேனியிற் கொண்டு வழிபடும் முறை,

எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முற்றொட்டே நிகழ்ந்து வருவதொன்றும். இறைவனைச் சிவந்த நிறமுடைய 'சேயோன்' ஆகவும், நீலநிறமுடைய 'மாயோன்' ஆகவுங்கொண்டு வழி படுந் திருவுருவ வணக்கம்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்" என்னுந் தொல் காப்பியப் பொருளதிகாரச் சூத்திரத்திலேயே எடுத்துச் சொல் லப்பட்டிருக்கின்றது. 'பஃறுளியாறு' கடல்கொள்ளப்படும்முன் அவ் யாறு பாய்ந்த பெருநிலப் பரப்பை அரசாண்ட **பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** என்பான் சிவ பிரான் திருக்கோயிலை வலம்வந்துபணியும் இயல்பினனென்பது,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே" என்று அவனுட னிருந்த **காரிகிழார்** என்னும் நல்லிசைப்புலவர் பாடிய பாட் டான் (புறநானூறு, சு) நன்கு புலனாகின்றது. இப் பாண்டி மன்னன் அவையி லிருந்த மற்றொரு நல்லிசைப் புலவரான **நெட்டிமையார்** என்பார் இவனை வாழ்த்துகின்றுழி,

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் **பஃறுளி** மணலினும் பலவே" என்பதனாற் (புற நானூறு, கூ) பஃறுளியாற்று மணலினும் பல ஆண்டு வாழ்க வென அவனை வாழ்த்துதல் கொண்டு, முதுகுடுமி எனும் அப் பாண்டிவேந்தனும், அவனது அவைக்களத்துப் புலவர்களான 'காரிகிழார்,' 'நெட்டிமையார்' முதலியோரும் பஃறுளியாறு கடல்கொள்ளப்படும் முன் அஃதாவது இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்குமுன்னரே இருந்தோராதல் நன்குதுணியப்படும்.

இனித், தொல்காப்பியம் ஆக்கப்பட்ட காலத்தில் முத்தீ வழிபாடும், அம் முத்தீக்கண்ணும் முனைத்து விளங்கும் இறை வன் சிவந்தமேனியனைச் 'சேயோன்' என நிற்பனென்னுங் கோட்பாடும் மிக்கு வழங்கினவாயினும், 'சிவன்' என்னும் பெயராலாதல், முக்கண்ணன்' என்னும் பெயராலாதல் இறை

வனை வணங்கும் வணக்கம் அஞ்ஞான்று உளதாயிற்றில்லை. 'முக்கண்ணன்' 'சிவன்' என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்தில் ஓரிடத்தாயினுங் காணப்படவில்லை. இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட காரிகிழாரது செய்யுளிற் காணப்படும் 'முக்கண்ணன்' என்னுஞ் சொல் தொல்காப்பியத்திற் காணப்படாமையை உற்றுநோக்குங்கால், தொல்காப்பியங் காரிகிழாரது காலத்திற்கும் பன்னூற்றாண்டு முற்பட்டு இயற்றப் பட்டதென்பது தெளியப்படும். படவே, தொல்காப்பியனார் காலத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள் முருகக்கடவுளும், அக் கடவுள் முனைத்துவிளங்கும் ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீயும், மாயோனுமேயாம்.

இனி, இருக்குவேதத்தில் உருத்திரக்கடவுண்மேற் பாடப் பட்ட பாக்களையும், ஏனைச் சிறுதெய்வங்கண்மேற் பாடப்பட்ட பாக்களையும் ஒப்பிட்டு நோக்குங்கால், ஏனையோரைப் பாடிய பாக்களினும், உருத்திரன்மேற் பாடியவை மிகச் சிலவாதல் ஆராய்ச்சிவல்லார்க் கெல்லாம் எளிதின் விளங்குவதேயாம். அச் சிலவற்றுள்ளும் 'உருத்திரன்' என்னும் பெயரன்றி, 'முக்கண்ணன்' எனும் பெயர் காணப்படுகின்றிலது. இருக்குவேதப் பத்து மண்டிலங்களுள், ஏனை ஒன்பது மண்டிலங்களை விடக் காலத்தாற் பிற்பட்டதாகிய பத்தாம் மண்டிலந் தொண்ணூற் றிரண்டாம் பதிகம் ஒன்பதாஞ் செய்யுளில்மட்டும் "ஏபி: சிவ:" எனச் 'சிவன்' எனும்பெயர் காணப்படுகின்றது. சுக்கில எசுர் வேதத்தின்கண்ணதான 'சதருத்ரியத்'தில் உருத்திரன், சிவன், சர்வன், பவன், சங்கரன், பசுபதி, ஈசானன் முதலான சிவபிரான் பெயர்களெல்லாம் ஒருங்கே காணப்படினும், 'முக்கண்ணன்' என்னும் பெயர்மட்டும் ஆண்டுங் காணப்படுகின்றிலது. 'த்ரையம்பகன்' எனும் ஒருசொற் காணப்படினும், அஃது 'அம்பிகையாகிய அம்மையோடு கூடினவன்' எனப் பொருள் செய்யப்படு கின்றதல்லாமல், முக்கண்ணன் எனப் பொருள் செய்யப்படுகின் றிலது. இருக்கு, எசுர் முதலான வேதங்கள் எங்கணும் 'ஆபி

ரங் கண்களுடையவன் சிவபிரான்' என்பது சொல்லப்படுகின்றதே யல்லாமல் 'முக்கண்ணன்' என்பது ஓரிடத்தாயினுஞ் சொல்லப்படவில்லை. பண்டைத் தென்றமிழ் மக்களின் கோட்பாடுகளைப் பெரிதுந் தழுவி எழுதிய இதிகாசங்கள், புராணங்கள், உபநிடதங்கள் முதலாயின ஈண்டைக்கு மேற்கோள்கள் ஆகா. மிகப் பழைய தமிழ்நூல் வடநூல்களை நன்காய்ந்து காணுங்கால், எல்லாம்வல்ல இறைவற்கு, ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்று ஒளிகளையும் முக்கண்களாக அமைத்துச், சிவந்தொளிரும் உலகுருவினையே அவற்கு ஒரு திருமேனியாகக் கற்பித்து அவனை வணங்கும் வணக்கம் பண்டைத் தமிழ் மக்கட்கு மட்டுமே உரித்தாதல் இனிது விளங்காநிற்கும்.

இன்னும், இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்நூல்கள் தமிழ்ப்பாட்டுக்களிலாதல் வடநூல்கள் வடமொழிப்பாட்டுக்களிலாதல், கடவுளை நான்முகன் திருமால் சிவபிரான் என முத்திறப்படுத்து 'மும்மூர்த்தி' என்றோதி, அம் மூவருட் சிவபிரானும் ஒருவன் என்னும் பொருந்தாக் கோட்பாடு ஒரு சிறிதாயினுங் காணப்படாமையும், அவற்றின் கண்ணெல்லாஞ் சிவபிரான் பிறப்பு இறப்பு இல்லா எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகவே வைத்து மொழியப்படுதலும் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாலனவாகும்.

இனி, உருத்திரப் பெருமான் சிவந்த நிறத்தினனாய்த் திகழ்தலோடு, சென்னியிற் செக்கர்ச்சடைகளும் உடையனாயிருக்கின்றன னென்பது இருக்குவேதத்திற் பலகாலும் நுவலப்பட் டிருக்கின்றது. இதற்கு, அதன் முதன்மண்டிலத்தில் "இமா: ருத்ராய தவஸே கபர்திநே க்ஷயத் வீராய" என்று தொடங்கும் ககச-ஆம் பதிகமே சான்றாம். இதன்கட் போந்த 'கபர்திந்' என்னுஞ்சொற் 'சடையன்' என்னும் பொருட்டு. இதுவும், இதனையொத்த இருக்குவேதப் பதிகங்கள் ஏனையவும் நாலாயிரத்து நானூறாண்டுகட்கு முன்னரே இயற்றப்பட்டனவாகும்.

இன்னுங், கிறித்துசமயத்தவர்க் குரிய முதலாகமத்தில் 'இறைவன் ஆபிரகாமுக்கு எதிரே தோன்றி அருள்செய்தக்கால் தன் பெயர் எல்சடை என மொழிந்தான்' என்பது சொல்லப் பட்டிருக்கின்றது. மேலும், 'எல்' என்னும் அடைமொழியின் றிச் 'சடை' என்னும் பெயரே இறைவற்குரிய இயற்பெயராக 'ஜாப்' என்னும் ஆகமத்தில் முப்பத்தொருமுறை காணப்படு கின்றது*. இச் 'சடை' என்னுஞ்சொல் தமிழ்ச்சொல்லாதல் அறியாத ஈபுருமொழிப்புலவர், இதன் பிறப்பும் பொருளுந்தெரி யாமையிற் பெரிதும் இடர்ப்பட்டு மயங்குவாராயினர். 'ஆபிர காம்' முதலான பண்டை நாயன்மார்கள் தமிழரே யென்பது ஆராய்ச்சியிற் புலனாதலின், அவர் தமக்குத் தோன்றிய இறை வன் தன் பெயரைச் 'சடையன்' எனத் தமிழ்மொழியில் அரு ளிச்செய்தது சாலப் பொருந்துவதேயாம் என்க.

இனி, இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டு கட்குமுன் 'செவ்வேள்'மேற் பாடப்பட்ட 'குன்றம் பூதனாரது' பரிபாடற் செய்யுளிற், சிவபிரான் தன் சடைக்கற்றையிற் கங் கை நீரைத் தாங்கிநிற்கும் இயல்பு,

"எரிமலர்த் தாமரை இறைவீழ்த்த பெருவாரி
விரிசடைப் பொறையூழ்த்து விழுநிகர் மலரேய்ப்பத்
தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி
மணிமிடற் றண்ணற்கு மதியாரற் பிறந்தோய் நீ" என்று

தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. 'திருமாலின் திருவடி களினின்றும் இறங்கிய கங்கை நீரைச் சிவப்பிரான் தனது சடைக்கண் ஏற்றான்' எனப் பிற்காலத்து வைணவர் முழு முதற் கடவுளை இழித்துரைப்பான் வேண்டிக் கட்டிவிட்ட பொய்க்கதை பழைய தமிழ்நூல் வடநூல்களிற் சிறிதுங் காணப் படாமையும் ஈண்டு நினைவிற் பதிக்கற்பாற்று.

---

* See Dr. H. E. Ryle's Commentary on the Book of Genesis, p. 197.

இனி, இறைவன் திருமுடிமேற் பிறையமர்ந்து விளங்குந் தோற்றம், இற்றைக்கு ஆயிரத்தெண்ணூ றாண்டுகட்கு முன் பாடப்பட்டனவாகிய,

"ஓங்குமலைப் பெருவிறற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறை" (புறம், ருரு),

"பால்புரை பிறைநுதற் பிறந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன்" (புறம், கூக),

"நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டுஅத் தோலா தோற்கே,
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே,
செவ்வான் அன்ன மேனி, அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்று
எரியகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழற் றவிர்ந்தன்றால் உலகே" (அகம், க)

என்றற் றொடக்கத்துப் பழந்தமிழ்ச் செய்யுட்களிற் றெளித் துரைக்கப்பட் டிருத்தல் காண்க. ஏனைத் திருவுருவவடையா ளங்களும் இவ் வகநானூற்றுச் செய்யுட்கண் ஓவியத்தெழுதிக் காட்டினாற்போல் அத்துணை எழில்பெறக் கூறப்பட்டிருத்தலும் வியக்கற்பாலதொன்றாம்.

இவ்வாறாக ஒளியொடுகூடி விளங்கும் உலகத் தோற்றத் திணையே உருவக வகையால் இறைவன்றன் திருவுருவ மாக

வைத்து வழிபட்ட பண்டைத் தமிழ்ச் சான்றோரில், அந்தணர் என்பார் வேறுமுயற்சியிற் புகுதலின்றி, இறைவற்கு வழிபாடு ஆற்றுதலினும், இறைவன் நூல் ஓதுதலினுமே கருத்து ஒருப் பட்டு நின்றனராகலின், அவரெல்லாம் அவ்விறைவன் றிருவுரு வத்தோடு ஒத்த தவவடிவமே தமக்கும் உரியதாகக்கொண் டிருப்பாராயினர். அரசரைச் சார்ந்தார் பெரும்பான்மையும் அவ் வரசரோடொத்த கோலத்தினையும், முனிவரைச் சார்ந்தார் பெரும்பான்மையும் அம் முனிவரோடொத்த கோலத்தினையும், எனைப் பல்வகை நிலையின் நிற்பாரைச் சார்ந்தார் பெரும்பான் மையும் அவ்வந் நிலையினர்க் குரிய கோலத்தினையுந் தாந் தாம் மேற்கொள்ளுதல் இயல்பாதல்போல, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைச் சார்ந்தாரும் பெரும்பான்மையும் அக் கடவுட்குரிய திருக்கோலத்தினைத் தாமும் மேற்கொண்டு ஒழுகுதலும் இயல் பாயிற்றென்பது. எனவே, இறைவன் பொன் போன்ற ஒளி வடிவினனுதல் பற்றி அவன் வழியில் நிற்பாரான அருந்தவத் தோர் தாமுந் தழல்வடிவினதாகிய காவியாடை உடுப்பா ராயி னர். தழல் தான்பற்றிய பொருளைத் தூய சாம்பராக்கி அச் சாம்பரைத் தன்மேற் பூக்க அணிந்திருக்கும் இயல்பே இறை வன்றன் திருமேனிமிசைத் திமிர்ந்திருக்குந் திருநீற்றின் உண் மையாதல் கண்டு, அவனை வழிபடுஞ் சான்றோருந் தந்திருமேனி மேலுந் திருநீறு பூசாநிற்பர். இறைவன் தனது நெற்றிமேற் கண்ணொடு முக்கண்ணனுய் விளங்குதலோடு ஒப்பவே, சான் றோருந் தமது நெற்றிமிசைச் சாந்திறுற் பொட்டிட்டிருப்பர். இறைவன் தன் திருமுடிமேற் சடைக்கற்றை உடையனுப் இருத் தல்போலவே, அருந்தமிழ்த் தாபதருந் தஞ் சென்னிமேற் சடை முடியுடையராயிருப்பர். இறைவன் தன் சடைக்கற்றைமிசைச் சுமந்திருக்குங் கங்கைநீர்க்கு அடையாளமாகவே, தமிழ்த்தாப தருந் தம் கையில் தண்ணீர்க் குடுவை ஏந்தியிருப்பர். இறைவ னைப்போல் தண்ணீரைத் தாம் தலைமிசைத்தாங்குதல் ஆகாமை யின், அருந்தவத்தோர் அதனைத் தலையிலன்றிக் கையின்கட்

டாங்குவாராயின ரென்று உணர்ந்துகொள்க. இன்னும், மும் மலங்களைச் செகுக்கும் இறைவனது பேராற்றலே அவன் தன் கையில் ஏந்தி நிற்கும் முத்தலை வேலாகச் சொல்லப்படுதலின், அவனது திருக்கோலத்தைத் தாங்கிய தாபதரும் 'முக்கோல்' ஏந்தியிருப்பர்; இதுபற்றியே இவர் 'முக்கோர்பகவர்' எனவும் மொழியப்படுவர்*. இன்னும், ஆணவமலத்தின் வலியையொடுக்கிய இறைவனது நிலையே, அவன் புலித்தோலை உடுத்திருக்கும் இருப்பாதலின், அவன்வழிச் சார்ந்த தாபதர் தாமும் புலித்தோலை மேற்கொண்டிருப்பர்; இனி, 'மான்' என்னுஞ் சொல் தமிழில் மான் என்னும் விலங்கினையும், வடமொழியிற் 'பிரகிருதிமாயை'யினையுங் குறிப்பதொன்றாகலின்† மாயையையொடுக்கிநிற்கும் நிலைக்கு அடையாளமாக மான்றோலை இருக்கையாய்க்கொண்டும் இருப்பரென்க. இன்னும், எல்லா நூற்கல்விக்கும் இறைவனே தலைவன் என்பதற்கு அறிகுறியாக அவன் தனது வலக்கையிற் சுவடியொன்றேந்தி அமர்ந்திருத்தல்போல, அவன் வழிப்பட்ட தாபதருந் தமது கையில் நூல் ஒன்றேந்தியிருப்ப ரென்க. இவ்வாறாக இறைவனோடொத்த வடிவுகொள்ளுந் தமிழந்தணரின் தவவடிவ அடையாளங்களிற் சில, ஆசிரியர் தொல்காப்பியனாரால்,

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய" என்று ஓதப்பட்டமை

காண்க. இச் சூத்திரத்தின்கட் சொல்லப்பட்ட 'நூல்' என்பது 'கலைநூலே' யல்லாமற் பூணூல் அன்று. தொல்காப்பியனார் நூல் எழுதிய பண்டைக்காலத்திற் புரிநூல் பூணும் வழக்கம் உண்டென்பதை நாட்டுதற்குச் சான்று இன்மையானும், துறவொழுக்கத்தின் நிற்பார்க்குப் பூணூல் இன்மை வடநூலார்க்

* "எறித்தருகதிர்தாங்கி" என்னும் பாலைக்கலிக்கு நச்சினார்க்கினியரெழுதிய உரையைக் காண்க.

† சிவஞானமாபாடியம், கசூ0-ஆம் பக்கம்.

கும் உடம்பாடாகலானும்*, இதற்குப் பூணூல் என்று உரை கூறிய பிற்காலத் துரைகாரரான 'பேராசிரியர்' கூற்றுப் பொருந்தாமை கண்டுகொள்க. 'கரகம்' என்பது நீர்க்குடுவை. 'முக்கோல்' இறைவ னேந்திய முத்தலை வேலுக்கு அடையாளம். 'மணை' இருத்தற்கு இடும் புலித்தோல் மான்றோல் முதலியன. இன்னுந் தவவொழுக்கம் மேற்கொண்ட அந்தணர் தலைமிசைச் சடைமுடியுடையரா யிருப்பரென்பது,

"கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே" என்னும் பழைய

புறநானூற்றுச் செய்யுளால் (உருக) இனிது விளங்காநிற்கும். இன்னும் அவர் காவியாடைபூண்டு முக்கோல் கைக்கொண்டு தவவொழுக்கத்தின் நிற்றல்,

"கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப" என்னும் பழைய முல்

லைப்பாட்டு அடிகளாற் புலனாகின்றது. இன்னும் அவர் மேற்கூறிய தவஅடையாளங்களோடு, தந் திருமேனிமேல் திருநீறும் பூசியிருப்பரென்பது,

"சுத்திய பொக்கணத்து என்பணி கட்டங்கஞ் சூழ்சடை வெண், பொத்திய கோலத்தினீர்" என்று திருச்சிற்றம் பலக்கோவையாரில் (உசஉ) மாவிரதியர் விளிக்கப்படுமாற்றால் அறியப்படும்.

இங்ஙனமாகப் பண்டைக்காலத்துத் தண்டமிழ் நாட்டிலிருந்த தாபதரெல்லாரும், எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளை 'முருகன்,' 'சிவன்' என்னும் பெயர்களால் முத்தீக்கண்வணங்கி, அம் முழுமுதற்கடவுளுக்குத் தாம் உருவகவகையாற் கற்பித்த வடிவத்தையே தாமும் பூண்டு, தவவொழுக்கத்தின் கண்ணராய்

---

* துறவிகள் பூணூலைக் களைந்தெறியுமாறு பிரமோபநிடதங் கூறுதல் காண்க.

ஆங்காங்கு வைகினமையே பழைய செந்தமிழ் நூல்களான் அறியக்கிடக்கின்றது. இவ்வாறொழுகிய அருந்தவத்தோரின் வடிவமும், அவர்தந் தவவொழுக்கமும், அவ் வொழுக்கத்தின் பாலதான நோன்பும், பார்ப்பனரின் துறவொழுக்கமுமே 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்களால் உணர்த்தப்பட்டன என்பதை மேலே 485, 486-ஆம் பக்கங்களிற் பழையநூல் மேற்கோள்கள் பல கொண்டு நன்கு விளக்கிக்காட்டினேம். தொல்காப்பியம் முதலாக வந்த பண்டைத் தமிழ்நூல்களில் ஓரிடத்தாயினும் 'படிமை,' 'படிவம்' என்னுஞ்சொற்கள், சமண்முனிவரின் தவவொழுக்கத்தினை உணர்த்துதற்கு மேற்கோள் கண்டிலம். கரிகாற்சோழன் காலத்திற்கு அதாவது இற்றைக்கு ஆயிரத்துத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் தமிழ்நாட்டின்கட் சமண்சமயமாதல் அதனைத் தழுவினோராதல் இருந்தன ரென்பதற்கு ஏதொரு சான்றும் பழைய தமிழ்நூல்கள் தமிழ்ப்பாட்டுகளில் ஓர் எட்டுணையுங் காணப்படவில்லை.

உண்மை யிவ்வாறிருப்பத், தொல்காப்பியனாரைச் சமண்முனிவரென நாட்டப்புக்கவர், அவர் காலத்திற் சமண்மதந் தமிழ்நாட்டில் இருந்ததென்னுந் தமது கூற்றை மெய்ச்சான்று ஒன்றுதானுங் காட்டி நிறுவாமல் அவரைச் சமணரெனக் கூறப்புக்கது*, பழந்தமிழ் நூலாராய்ச்சியுடையாரால் நகைபாடி எள்ளப்படுதற்கே இடனுடைத்து காண்க. மேலும், அவர் 'படிமை' என்னுஞ் சொல்லுக்குத் 'தவவொழுக்கம்' என்னும் பொருள் உளதாதலைக் கண்டிலேம் எனவும், தாம் வினவிய வடமொழிப் புலவர்களுங்கூட அச்சொல் அப்பொருளில் வைதிகநூல்களில் வழங்குதலைத் தமக்கு எடுத்துக்காட்டல் இயலாமையின் அந்நூல்களினும் அச்சொல்லும் பொருளும் இல்லையென்று தெளிந்தேம் எனவும் உரைப்பாராயினர்.

பழைய தமிழ்நூல்களை ஆராய்ந்துபாராமலே அவர் அங்ஙனந் துணிவுரை நிகழ்த்தியது இரங்கற்பாலதொன்றாம்.

---

* செந்தமிழ், தொகுதி, க௮, பகுதி, ௬.

"கூறினை பெருமநின் படிமையானே" என்னும் பதிற்றுப்பத்திலும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண்டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே" என்னுங் குறுந்தொகை யிலும்,

"கல்தோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்" என்னும் முல்லைப்பாட்டிலும் 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்கள் அந்தணரின் தவவொழுக்கத்தை உணர்த்துதல் முன்னரே எடுத்துக் காட்டினம். அச் சொற்கள் அங்ஙனம் அப் பொருள் உணர்த்தும் வழியெல்லாஞ் சைவசமயத் துறவிகளையே உணர்த்தக் காண்டுமன்றிச், சமண் துறவிகளை ஒரு சிறிதாயினும் உணர்த்தக் காண்கிலேம்.

மேலுஞ், சமண் சமயத்தினர் முழுமுதற்கடவுள் ஒன்று உண்டென்னும் நம்பிக்கையுடைய ரல்லர்; அந் நம்பிக்கை யில்லாமையின், முத்தீவேட்டு வழிபடும் நீரரும் அல்லர்; அஃதில்லாமையின், தீ நிறத்ததாகிய காவியாடையும், தீயின் எச்சமாகிய தூய வெண்ணீறும் மேற்கொள்வாரும் அல்லர்; இறைவன் திருவடையாள மாகிய சடைமுடியுந், தண்ணீர்க் குடுவையும், முக்கோலும் உடையாரும் அல்லர்; இப்பெற்றியினரான சமண் முனிவர் 'ஆசிவகரும்,' 'நிகண்டரும்,' 'முண்டசாவகரும்' என முத்திறப்படுவ ரென்பதூஉம், இவருள் ஆசிவகராவார் ஆடையின்றி முற்றும் அம்மணமாயும், நிகண்டர் இடுப்பில் ஒருசிறு துண்டுமட்டும் உடுப்பவராயும், முண்டசாவகர் அரையில் ஒரு துண்டு உடுத்துத் தலையை மழித்துவிடுபவராயும் இருப்பரென்பதூஉம் அங்குத்தரநிகாயத்திற் குறிக்கப்பட் டிருக்கின்றன. இச் சமண்முனிவரும், இவரின் வேறான புத்த முனிவர்களும் கௌதமசாக்கியர்காலத்தில் இருந்தாற்போலவே, தலையிற் சடைமுடியுடையருங் கையில் முக்கோல் ஏந்தியவருமான பார்ப்பனத்துறவிகளும் அக்காலத்தில் வடநாட்டிலும் இருந்தனரென்பதூஉம் அவ் அங்குத்தரநிகாயத்திலேயே நுவலப்பட்டிருக்கின்

றது*. எனவே, கௌதமசாக்கியர் இருந்த காலத்திலேயே அதாவது இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயே வடநாட்டிலுஞ் சிவவடிவம் பூண்ட பார்ப்பன முனிவர்கள் இருந்தமை பௌத்தசமய நூல்களினாலேயே புலனாகின்றதன்றோ? மற்றுத் தென்றமிழ்நாட்டிலோ அக்காலத்திற் பார்ப்பனமுனிவரைத் தவிர, ஏனைச் சமண் பௌத்தமுனிவர் இருந்திலர். ஆகவே, 'படிமை' என்னுஞ்சொற் றென்றமிழ் நாட்டிலிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையுந் தவ வடிவத்தையுஞ் சுட்டுதற்கே எழுந்ததன்றிச், சமண்முனிவரின் தவவொழுக்கத்தை உணர்த்துதற் கெழுந்ததன் றென்பது கடைப்பிடிக்க. அதுவேயுமன்றி, வடநாட்டி லிருந்த சமண் முனிவரின் தவவொழுக்கத்தை உணர்த்துஞ் சொல்லாக அது சமண்சமய நூல்களிலாயினும் வழங்கப்பட்டுளதோவென யாம் அந்நூல்களை ஆராய்ந்துபார்க்க, ஆண்டும் 'படிமா' என்னுஞ் சொல்லைக் கண்டிலேம். அச் சொல் சமண் முனிவரின் தவ வொழுக்கத்தையே குறிக்குமென நாட்டப்புக்கவராதல், அதற்கு ஒரு மேற்கோளாயினுஞ் சமண் நூல்களிலிருந் தெடுத்துக் காட்டினரோ வென்றால், அதுதானும் இல்லை. 'படிமா' என்பது சமண்சமயச்சொல்லே என்பதற்கு ஏதொரு மேற்கோளும் பழைய சமண் நூல்களிலிருந்தெடுத்துக் காட்டாது, இப்போது சில ஆண்டுகளுக்குமுன் ஓர் ஆங்கிலமாதர் எழுதிய ஓர் ஆங்கில நூலை நம்பி அச்சொல் சமண் சமயத்தவர்க்கே யுரித்தாதல் வேண்டுமெனத் தந் துணிபுரைத்தலினும் பிழைபாடாவது பிறிதில்லை; இப் பிழைபாட்டுரையைக் கொண்டு ஆசிரியர் தொல்காப்பியனாரைச் சமண்முனிவரென நாட்டப்புகுவதினும் பேதைமையாவதும் பிறிதில்லை. ஆராய்ச்சிமுறை இன்னதென்றறியாதார் தாமும் இன்னோரன்ன ஆராய்ச்சியிற் புகுதல் பெரிதும் ஏதமாமென்க.

* See Prof. Rhys Davids' Buddhist India, p. 145. and Dialogues of the Buddha, vol. 1, pp. 220, 221.

இப்போது வழங்குஞ் சமண் நூல்களில் வடமொழி தென் மொழியில் இருப்பன வெல்லாம் கி-பி ஆறும் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இயற்றப்பட்டனவாகுமென அவை தம்மை நன்காராய்ந்த ஐரோப்பிய ஆசிரியர்கள் கூறுநிற்கின்றனர்*. இவ்வாறு பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட சமண் நூல்களில் யாண்டோ அருகிப் 'படிமை' என்னுஞ் சொல் சமண்முனிவரின் தவவொழுக்கத்தை யுணர்த்துதற்கு வழங்கப்பட்டிருக்கலாம். அதுகொண்டு அச்சொல் சமண்சமயத்தவர்க்கே உரித்தென்றல் ஆராய்ச்சியுணர்வில்லார் கூற்றும். கி-பி ஆறும் நூற்றாண்டிலிருந் தெழுதப்பட்ட சமண்நூல்கட்கு ஐந்நூறாண்டு முற்பட்ட அருந்தமிழ் நூல்களினும் பாட்டுகளினு மெல்லாம் அச்சொல் அந்தணரின் சைவ தவவொழுக்கத்தையே உணர்த்தக்காண்டலால், அது சைவசமயத்தவர்க்கே உரித்தாவதன்றிச் சமண்மதத்தவர்க்கு உரித்தாதல் ஒருவாற்றானுஞ் செல்லாது. தமக்கு முன்னிருந்த சைவ அந்தணத் தாபதர்தந் தவவொழுக்கத்துக்கு வழங்கிவந்த அப் 'படிமை' யென்னுஞ் சொல்லையே பின்வந்த சமண்முனிவர் தமக்கும் உரியதாக ஒரோவிடத்துப் பயன்படுத்தினராகற்பாலர். வடநாட்டிற் கௌதமசாக்கியர் காலத்திருந்த புத்த சமண் சமயத்தவருங்கூடத், தங் காலத்திற்கு முன்னிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே முதலாக வைத்து, அதன்படி தமக்குரிய ஒழுகலாறுகளை வகையறுத்தமைப்பாராயினரென, இவைதம்மைப் பலபடியானும் நடுநின்று நன்காய்ந்த **ஹெர்மன் ஜாகோபி** என்னும் ஐரோப்பிய ஆசிரியர் நன்கு விளக்கிக்காட்டி யிருக்கின்றார்†. வடநாட்டிற் பண்டைக்காலத் திருந்த சைவ அந்தணத் தாபதர் சிவபிரான் திருவுருவ அடையாளமான காவியாடையே உடுத்துத் தலைமேற் சடைமுடியுடையரா யிருந்தன ரென்பது, அவர் தமது 'ஜைனசூத்திர ஆங்கிலமொழிபெயர்ப்பின்' முகவுரையில் எடுத்

* Dr. A. Barth's 'The Religions of India;' p. 140. † Introduction to Jaina Sutras by Hermann Jacobi, pp. xxiv–xxix.

துக்காட்டிய போதாயன தருமசாத்திர மேற்கோள்களால் (உ, சு, கக, கரு—உ க) நன்குவிளங்கும். சைவ அந்தணமுனிவர் உடுத்துங் காவியாடையைப் பார்த்தே, பௌத்தபிட்சுக்கள் நிறத்தால் அதனை யொப்பதொரு துவராடை யுடுப்பராயின ரென்பதூஉம், புத்த சமண்முனிவர் துவக்கத்தில் வடநாட்டின் ஒரு சிறு பகுதியில் இருந்தமைபோலாது சைவமுனிவரர் பரத நாடெங்கும் பண்டுதொட்டே பரவியிருந்தன ரென்பதூஉம் பிறவும் அவரால் நன்கெடுத்துக் காட்டப்பட்டன. உண்மை யாராய்ச்சியிற் றேர்ந்த இவ் வைரோப்பிய ஆசிரியர் எடுத்துக் காட்டிய பண்டை வடநூல் மேற்கோள்களையும், அவற்றை அடிப்படையாக்கொண்டு ஆராய்ந்து காட்டிய உண்மை முடிபுகளையும் நடுநின்று நோக்கவல்லார்க்குப், புத்த சமண்முனிவர் தோன்றுதற்குப் பல நூற்றாண்டுகள் முற்றொட்டே சைவ அந்தண அருந்தவத்தோர் இப் பரதநாடெங்கும் பரவியிருந்தமையும், பின் வந்த புத்த சமண் துறவோர் தமக்குப் பல நூற்றாண்டுகள் முன்னிருந்த சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே பெரும்பான்மையுந் தழுவி யொழுகலானமையுந் தெற்றெனப் புலனாகாநிற்கும். ஆகவே, தவவொழுக்கமும், அத் தவவொழுக்கத்தை யுணர்த்தும் 'படிமை,' 'படிவம்,' 'ப்ரதிமா' என்னுஞ் சொற்களுஞ், சைவ அந்தணரினின்று ஏனைப் புத்தசமண் சமயத்தார்க்கு வந்ததாகல் வேண்டுமேயன்றிப், பிற்காலத்தவரான புத்தர் சமணரிலிருந்து, இவர்க்குப் பல்லாயிரம் ஆண்டு முற்பட்ட சைவ முனிவரர்க்குச் சென்றதாகல் ஏலாது. ஆதலால், முற்காலத்தது இது, பிற்காலத்தது இது என்று பகுத்தாராய மாட்டாது, முன்னது பின்னதாகவும் பின்னது முன்னதாகவும் பிறழக்கொண்டு, படிமையொழுக்கஞ் சமணர்க்கே யுரியதெனக் கரைந்தாரது உரை பெரியதொரு தலைதடுமாற்ற வுரையாய் முடிந்தமை கண்டுகொள்க.

அற்றேலஃதாக, தவவொழுக்கமும் அதற்கேற்ற தவவடிவமும் அதனை யுணர்த்தும் 'படிமை' என்னுஞ் சொல்லும், புக்

தர் சமணர் தோன்றுதற்குப் பல்லாயிர ஆண்டுகள் முன்னரே சைவ அந்தணர்பால் உளவாயது உண்மையாயின், அதனை நிறுவுதற் குரிய பழையநூன் மேற்கோள்கள் காட்டுக வெனின்; அவை தம்மைப் பண்டைத் தமிழ்நூல்களினின்றும் முன்னரே எடுத்துக்காட்டினும். அப்பழந்தமிழ் நூல்கள் பாட்டுக்களில் யாண்டும் புத்த சமண் சமயத்தவர் ஒரெட்டுணையுங் குறிக்கப் படாமையும், 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்கள் சைவ அந்தணரின் தவவொழுக்கத்தையே குறித்தற்கு அவற்றுள் வழங்கப்படுதலும் ஆண்டே விளக்கிப் போந்தாம். ஆகவே, புத்தர் சமணர் தோன்றுதற்கு மூவாயிர ஆண்டு முற்பட்டதாகிய **தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையிற்** போந்த 'படிமையோன்' என்னுஞ்சொற் சைவ அந்தண முனிவனாகிய ஆசிரியன் தொல்காப்பியன்றன் தவவொழுக்கத்தையுந் தவவடிவத்தையும் மட்டுமே சுட்டுதல் வேண்டு மன்றி, அவற்குப் பெருங்காலம் பிற்பட்டிருந்த புத்தர் சமணரின் தவவொழுக்கத்தையாதல் தவவடிவத்தையாதல் சுட்டுதல் ஒரு சிறிதும் இசையாதென் றுணர்ந்துகொள்க. தொல்காப்பியத்துள் யாண்டும் புத்தசமண் சமயங்கள் ஒரு தினைத்தனையுங் குறிப்பிடப் படாமையும் நினைவிற் பதிக்கற்பாற்று.

இன்னுங், கௌதமசாக்கியரும் மகாவீரருந் தோன்றி முறையே புத்தசமண் சமயங்களைத் தோற்றுவித்தற்குமுன், சாக்கிய வகுப்பினர் சிவபிரானையே வணங்கிவந்தன ரென்பது, வடநாட்டினுள்ள பழைய கல்வெட்டுகளின் ஆராய்ச்சியால் நன்கு புலனாகாநிற்கின்றது*. கௌதமசாக்கியர் பிறந்த ஞான்று, அவர் சிவபிரான் திருவருளைப் பெறுதற் பொருட்டுச் சிவபிரான் திருக்கோயிற்குப் பெற்றோரால் எடுத்துச் செல்லப்பட்டமை, பழைய புத்தசமயக் கல்வெட்டு ஒன்றிற் செதுக்கிவைக்கப்பட்

* See Mr. H. Krishna Sastri's 'South-Indian Images of Gods and Goddesses,' p. 73.

டிருக்கின்றது*. மிகச் சிறந்த இச்சான்றுகளை உற்றுராய வல்லார் எவர்க்கும், புத்தசமண்மதங்கள் தோன்றுதற்குப் பல்லாயிர ஆண்டுகள் முற்றொட்டே இப்பரதநாடெங்கணும் பரவியிருந்தது சைவசமயமேயாமென்பதூஉம், இங்கு முழுதும் உலவிய தாபதர் சைவசமய அந்தண முனிவரேயாவரென்பதூஉந் தெற்றென விளங்காநிற்கும்.

அற்றேல், 'ப்ரதிமா,' 'படிமை,' 'படிவம்' என்னுஞ் சொற்களுள் ஒன்றேனும், புத்தசமண் நூல்களுக்குமுற்பட்ட பழைய வட நூல்களுள் உண்டோவெனின்; உண்டு. வட நூல்களுள் மிகப் பழையன இருக்கு, எசுர், சாமம் என்பவைகளேயாம். ஐயாயிர ஆண்டுகளுக்குமுன் தமிழர் ஆரியர் என்னும் இரு வகுப்பினர்க்கும் ஆசிரியராயிருந்த முனிவர்களாற் பாடப்பட்டுச் சிதர்ந்துகிடந்த இவற்றின் பாட்டுகள், பாரதப்போர் முடிந்தபின் வியாசரால் ஒருங்கு தொகுக்கப்பட்டு, இருக்கு, எசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களாக வகுக்கப்பட்டன. இவ் வேதப்பாட்டுகள் வழங்கிய காலத்தில் வணங்கப்பட்டு வந்த இந்திரன், வருணன், உருத்திரன் முதலான தெய்வங்களுக்கு உருவங்கள் சமைத்து வைத்து, அவற்றிற்கு வழிபாடு ஆற்றி வந்தனர் என்பதும் அவை தம்மைக் கருத்தூன்றி ஆராயும் வழி இனிது புலனாகின்றது. ஆரியர் போர்மேற் சென்ற காலங்களில் இந்திரனது வடிவத்தை எடுத்துச் சென்றனரென்பது இருக்குவேதத்திற்சொல்லப்பட்டிருக்கின்றது†. சிவபிரான் திருவடையாளமான சிவலிங்க வடிவத்தைப் பண்டைத் தமிழ் மக்கள் வைத்து வழிபட்டமை இருக்குவேத ஏழாம் மண்டிலத்தின் இருபத்தோராம் பதிகத்திலும், பத்தாம் மண்டிலத்தின் தொண்ணூற்றொன்பதாம் பதிகத்திலும் விளக்கமாக வைத்து நுவலப்பட்டிருக்கின்றது. இவையேயன்றி, 'ப்ரதிமா' என்னுஞ் சொல்லே ஒரு தெய்வம்போற் செய்த வடிவத்தைக் குறிக்கும்

* See Epigraphia Indica, Vol. V, p. 3.

† The Cambridge History of Ancient India, Vol. 1, p. 106.

மொழியாக எசுர்வேதத்தில் "நதஸ்ய ப்ரதிமா அஸ்தி" (கூஉ, கூ) என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மை களைச் சிறிதாயினும் ஆராய்ந்து பார்க்கும் அறிவு மதுகை யின்றி, 'ப்ரதிமா' என்னுஞ் சொல் சமண் நூல்களி லன்றிப், பழைய வேதநூல்களில் யாண்டுமில்லையென்று துணிந்துரைத் தவர்தம் பேதைமைப் பெருக்கை என்னென்பேம்! இனியே னும் அச்சொல் பௌத்த சமண்நூல்கள் தோன்றுதற்கு மூவா யிர ஆண்டு முன்னிருந்த எசுர்வேதத்திலேயே உளதென்றறிந் து அவர் உண்மை தெளியக்கடவராக.

இனி, அவர், தொல்காப்பியரைச் சமண்சமயத்தினரென நாட்டுதற்கு மற்றுமொரு சான்று காட்டுவே மெனப் புகுந்து, உயிர்களை ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறாக உள்ள ஐந்துவகைகளிற் பகுத்தடக்குதல் சமண்சமயக் கோட்பாடாகுமென்றுந், தொல் காப்பியனார் இவ்வைவகை உயிர்ப்பாகு பாடுகளைத் தமது 'மர பியற்' சூத்திரங்களில் எடுத்தோதுதலின் அவர் சமண்சமயத்த வரேயாதல் வேண்டுமென்றுங் கூறினர். இதுவும் ஒரு சிறிது ஆராயற்பாற்று.

சமண் மதத்தவர்கள் எவ்வகைப்பட்ட உயிரையும் எவ்வ கை ஏதுப்பற்றியுங் கொல்லலாகாது என்னும் மிகச் சிறந்த கொல்லா அறத்தைக் கடைப்பிடித்து நின்றவர்கள். வடநாட் டின்கண் வந்து குடியேறிய ஆரியரும் அவர்வழிச் சார்ந்த பார்ப்பனரும் வேள்வி வேட்டலை ஓர் ஏதுவாக வைத்துக்கொண் டு, எண்ணிறந்த விலங்கினங்களைக் கொன்று அவற்றின் ஊனை நெய்யிற் பொரித்து உண்டுஞ், சோமப் பூண்டில் இறக்கிய கள் ளை நிரம்ப அருந்தியும் வெறியாட்டயர்ந்து வந்தமையால், இயற் கையிலேயே புலாலுங் கள்ளும் மறுத்த சைவவேளாள அரசர் (க்ஷத்திரியர்) அவ்வாரியர்தந் தீயஒழுகலாற்றினை அருவருத்து, அதனைத் தடைசெய்தற் பொருட்டாகவே சமண் புத்தக்கொள் கைகளைத் தோற்றுவித்து, அவற்றை எங்கும் பரவச்செய்தனர். சமண்மத ஆசிரியரான 'மகாவீரரும்', புத்தசமய ஆசிரியரான

'கௌதம சாக்கியரும்' வடக்கே மகதநாட்டில் வைகிய க்ஷத்திரிய அல்லது தமிழ வேளாள அரசமரபிற் பிறந்தோரேயாவர். ஆரியர் வடநாட்டிற் புகுந்து ஆங்காங்குக் குடியேறியபோது, அங்கம், மகதம், காசி, கோசலம், வச்சி, மல்லை, சேதீ, வஞ்சம், குரு, பாஞ்சாலம், மச்சம், சூரசேனம், அச்சகம், அவந்தி, கந்தாரம், காம்போசம் முதலிய பதினாறு நாடுகளில் நாகரிகத்திற் சிறந்து விளங்கிய வேறு மரபினரான தமிழ வேளாளரே அரசு புரிந்தனர் என்பது **அங்குத்தரநிகாயத்தில்** (க, உகங; ச, உ௫உ, உ௫௬, உ௬0) செவ்வனே குறிக்கப்பட்டிருக்கின்றது. மகதநாட்டிலிருந்த தமிழர், முன்னரே யாம் விளக்கியெழுதிய பூருக்களைச் சேர்ந்தோராவர்*. இங்ஙனமாகச் சமண் கோட்பாட்டைப் பரவச்செய்த மகாவீரர் தமிழரச முனிவரேயாகையால், அவர்க்கும் அக்காலத் திருந்த ஏனை வேளாளர்க்கும் பொதுவாக உரிய கொல்லா அறத்தை அவர் வலியுறுத்திப் பரவச் செய்ததில் ஏதும் புதுமையில்லை. அஞ்ஞான்றிருந்த அத்தமிழ் முனிவர், தங் காலத்திற்குப் பல்லாயிர ஆண்டு முன்னிருந்த ஆசிரியர் தொல்காப்பியனார் முதலான தமிழ்ச் சான்றோர் கண்டுரைத்த உயிர்ப்பாகுபாடுகளையே தாமுந் தழுவிக் கூறினரல்லது, மகாவீரர் முதலாகப் பின்வந்த சமண்முனிவர் வகுத்ததனைக் கண்டு தொல்காப்பியனார் அவை தம்மைக் கூறினரல்லர்.

அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்: எவ்விடத்திலுள்ள உயிரையுங் கொல்லலாகா தென்பதே சமணர்தங் கோட்பாடாகையால், அக்கோட்பாட்டிற்கு இசையவே உயிர்கள் உயிர்வாழும் இடங்களை அவர்கள் முதலில் ஆராய்ந்துரைப்பாராயினர். உயிர்கள் நிலத்திலுள்ளனவும், நீரிலுள்ளனவும், நெருப்பிலுள்ளனவுங், காற்றிலுள்ளனவும் என நால்வகைப்படுமென்று உரைத்து, ஆண்டாண்டுள்ள உயிர்களுக்கு நோயுஞ் சாக்காடும் உண்டாகா வண்ணம், அவற்றோடு இயைந்து காணப்படும் உயிரில் பொருள்

* The Cambridge History of Ancient India, p. 309.

களைத் தாம் பயன்படுத்திக்கொள்ளும் முறைகளை விளக்கிக்காட்டுதலே சமண்சமய ஆசிரியர் கருத்தாகும். இப்போதுள்ள சமண் நூல்களில் மிகப் பழையதாகிய **ஆசாரங்கசூத்திரம்**, சுருதஸ்கந்தம், இரண்டு, மூன்று, நான்கு, ஏழாம் அத்தியயனங்களில், உயிர்கள் உலவுதற்கிடமான நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் இடவகையால் அவ்வுயிர்களை நால்வகைப்படுத்து, அவை தமக்கு இடர் நேராவண்ணம் அங்கங்குள்ள ஏனைப் பொருள்களைப் பயன்படுத்துமாறு விரித்துரைத்தல் காண்க; இதன் ஆறும் அத்தியயனத்தில், ஈரறிவு மூவறிவு நாலறிவு ஐயறிவு உடைய எல்லா உயிர்களுக்கும் இன்ப துன்பமும் அச்சமும் உளவாகலின், அவை தமக்கு எந்த ஏதுவைக்கொண்டும் எவ்வகை இடருஞ் செய்தலாகாதென்னும் அத்துணையே வற்புறுத்துரைக்கப்பட் டிருக்கின்ற தல்லாமல், ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறுகவைத்து உயிர்களைப் பாகுபாடு செய்தல் ஆண்டுங் காணப் படவில்லை. ஆகவே, உயிர்களை இடவகையால் நால்வகைப்பட வகுத்துக்காட்டுதலே பண்டைச் சமண் ஆசிரியர்தங் கருத்தாதல் காண்டுமன்றி, அறிவுவகையாற் பகுத்துக்காட்டுதல் அவர்க்குக் கருத்தாதல் கண்டிலம். இடவகையாற் பகுத்தலே அவர் தங் கோட்பாட்டுக்குப் பயன்படுவ தன்றி, அறிவு வகையாற் பகுத்தல் அதற்குச் சிறிதும் பயன்படுவதன்றும்; என்னை? ஈரறிவுடையவாயினும் அல்லது ஐயறிவுடையவாயினும் எல்லாவுயிர்களும் இன்பதுன்பமும் அச்சமும் உடையவாகையால், அறிவின் ஏற்றத்தாழ்வு கருதாது எல்லா வுயிர்களையும் பாதுகாத்தலே செயற்பால தென்பதூஉம், உயிர்கள் ஓரிடத்து உள ஓரிடத்து இல என அறியாமையாற் கருதிவிடாது நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கிடங்களினும் அவை உளவாதலைக் கருத்தூன்றி யாராய்ந்துபார்த்தல் இன்றியமையாததென்பதூஉம் அவர்தங் கருத்தாகலி னென்க. எனவே, உயிர்களை இடவகையால் ஆராய்தலே பண்டைச் சமணாசிரியர் கோட்பாடாகுமல்லது, அறிவுவகையால் ஆராய்தல் அவர்தங் கோட்பா

டாகாமை பெற்றும். பெறவே, உயிர்களை இடவகையாற் பகுத்து விரித்துக் காட்டிய பழைய ஆசாரங்க சூத்திரத் திற்கு மாறாக, அவைதம்மை இடைவகையாலும் அறிவுவகையாலும் பகுத்து விரித்துரைத்த உத்தராத்தியயன நூல் (௩௬) மிகவும் பிற்பட்ட காலத்தெழுந்த சமண்முனிவரால் தொல்காப்பியத்தைப் பார்த்துச் செய்யப்பட்டதொன்றாக வேண்டுமாகலின், அஃது ஈண்டைக்கு மேற்கோளாகாதென மறுக்க. ஆசாரங்க சூத்திரத்திற்குச் சிலாங்க முனிவர் எழுதியவுரை கி-பி அ௭௬-இல் முடிக்கப்பட்ட தொன்றாகையால்,* ஆசாரங்க சூத்திரத்தின் காலங் கி-பி ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டிற்கு மேற்பட்டதாகாது. 'உத்தராத்தியயனம்' சமண் நூல்களில் மிகப் பிற்பட்டதாதலும், அதன் இறுதிக்கண் உயிர்களை இடவகையாலும் அறிவுவகையாலும் பாகுபாடுசெய்து விரித்தோதும் முப்பத்தாறும் அத்தியயனம் இன்னும் பிற்பட்டகாலத்தே செய்து சேர்க்கப்பட்டதாதலும் மேற்குறிப்பிட்ட ஐரோப்பிய ஆசிரியரால் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன†. பழையதாகிய 'ஆசாரங்க சூத்திரம்' முதற்கண் உயிர்களை இடவகையாற் பகுத்து விரித்தோதி அறிவுவகையாற் பகுத்தலை ஒரு சொற்றொடரளவில் மிகச் சுருக்கிக் கூறாநிற்க, 'உத்தராத்தியயனமோ' இடவகையான் மட்டுமேயன்றி அறிவுவகையாலும் உயிர்களைப் பகுத்து மிக விரித்தோதா நிற்கின்றது; இதனை உற்றுநோக்க வல்லார்க்கு, உத்தராத்தியயனத்தின் இவ் விறுதிப்பகுதி பெரிதும் பிற்பட்ட காலத்ததாதலும், அறிவுவகையால் உயிர்களைப் பகுத்தோதுமுறை பண்டைச் சமணாசிரியர்களாலன்றிப் பின்றைச் சமண் புலவரால் அவர்தம் பழைய கோட்பாட்டுக்கு முரணாகக் கைக்கொள்ளப்பட்டதாதலும் அங்கையங் கனிபோல் இனிது விளங்காநிற்கும். உயிர்களை அறிவுவகையாற் பகுத்தல் சமண் கோட்பாட்டிற்கு இசைந்து அதற்கு ஏதொரு பப

* See H. Jacobi's Introduction to Jaina Sutras, Vol. 1, p. 1i.

† Do Do Vol. 2, pp. xxxviii–xxxix

னும் பயவாமையாலும், அவைதம்மை இடவகையாற் பகுத்தல் அதன் கோட்பாட்டொடு பெரிதும் ஒத்து அதற்குப் பயன்படுதலாலும், அதற்கிணங்கவே பழைய 'ஆசாரங்க சூத்திரமும்' உயிர்களை இடவகையாற் பகுத்தே விரித்துரைத்தலாலும், பண்டைக்காலத்துச் சமண் நூலாசிரியர்க்கு உயிர்களை அறிவுவகையாற் பகுத்தல் கோட்பாடன்றென்பது துணிந்துகொள்ளப்படும். ஆகவே, 'ஆசாரங்க சூத்திரத்'தைப்போல், உயிர்களை ஒரு சிறிதாயினும் இடவகையாற் பகுத்தோதாத ஆசிரியர் தொல்காப்பியனார் சமண் சமயத்தவராதல் யாண்டையதென மறுக்க. ஆசிரியர் தொல்காப்பியனார் சொற்பொருளாராய்ச்சியில் ஆழச்சென்று, அச் சொற்பொருளிலக்கணப் பரப்பெல்லாம் நுணுகி யறிந்தெடுத்து விளக்கி முடிக்கின்றுழி, உலகின்கட் காணப்படும் உயிர்த்தொகுதிகளெல்லாந் தத்தமக்கு இயல்பாக அமைந்த ஒன்றுமுதல் ஆறு ஈறான அறிவுகள் விளங்குதற்கேற்ற உடம்புகளின் வைகி உயிர்வாழுமாற்றைத் தமது நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டறிந்து, அறிவான்மிக்க சான்றோரெல்லாங் கண்டு வியந்து பாராட்டும்படி அவற்றை அறுவகைப்படுத்தோதித் தம தொப்புயர்வில்லா இலக்கணக் களஞ்சியத்தைக் கட்டி முடித்தார். இங்ஙனம் உயிர்களை அறிவுவகையால் அறுவகைப்படுத்து விளக்கல் இலக்கண ஆராய்ச்சியின்பாற் படுவதல்லது, ஒரு சமயக் கோட்பாட்டின்பாற் படுவதன்றாம். உயிர்களை இடவகையாற் பகுத்தலோ சமண் கொள்கைக்குப் பெரிதும் பயன்படுவதாகும். இவ்வாறு ஒன்றினொன்றியையாத இருவேறு பாகுபாடுகளின் இயல்பும் பயனும் அறிந்து பாராமல், தொல்காப்பியனாரைச் சமண்சமயத்தின்பாற் படுக்கப் புகுந்தார்தம் அறியாமையின் வலிவை என்னென்பேம்! அதுகிடக்க.

இனித், தொல்காப்பியனார் சமண்சமயத்தின ரல்லரென்பதற்குப் பின்னுஞ் சில சான்றுகள் காட்டுதும். பழைய சமண் நூல்களிளெல்லாம் நிலன் நீர் தீ வளி என்னும் நாற்பெரும் பொருள்களே சொல்லப்பட்டன வல்லாமல், அந் நான்கின்

வேறான 'விசும்பு' (ஆகாயம்) ஒன்று உளதென்பது கூறப்பட வில்லை. உத்தராத்தியயனத்திற் கூறப்படும் இடைவெளி ஐம் பெரும் பொருள்களிற் சேர்ந்ததன்று; அஃது ஆண்டு 'ஆகாச' மெனக் கூறப்படாமல் 'நபஸ்' எனக் கூறப்படுதலே அதற்குச் சான்றாம். மற்று, ஆசிரியர் தொல்காப்பியனாரோ,

"நிலந் தீ நீர் வளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகமாதலின்" (மரபியல், அகூ) என்பத னால் 'விசும்பு' என ஐந்தாவதொருபொருள் உளதென அரு ளிச்செய்கின்றார். சமண்நூலார் மக்களையுந் தேவர் நரகர்களை யும் ஐயறிவுடைய உயிர்வகைகளில் அடக்கி,

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோடு ஐயறிவுயிரே" (நன்னூல், உரியியல், அ) எனக் கூறுநிற்பர்; உத்தராத்தியயனநூலும் இங்ஙனமே கூறுநிற்கும். இவ்வைந்தறிவின் வேறாக ஆறாவது மனவறிவு ஒன்று உண்டென்பது பழைய சமண்நூல்களிற் காணப்பட வில்லை; பிற்காலத்து நூல்கள் மேற்கோள்கள் ஆகா. மற்று, ஆசிரியர் தொல்காப்பியனாரோ, மக்களினுங் கீழ்ப்பட்ட மாவும் மாக்களுமே ஐயறிவினவா மென்பதும், மக்களோ ஆறறிவின ராவ ரென்பதும் போதர,

"மாவுமாக்களும்ஐயறிவினவே"(மரபியல், ங உ) எனவும்,

"மக்கடாமே ஆறறிவுயிரே" (மரபியல், ஙங) எனவுந் தெற்றென மொழிகின்றார். மேலும், புத்தசமண் ஆசிரியர் தாம் இயற்றும் நூல்களின் முகப்பில் புத்தனையும் அருகனையும் வணங்காதிரார். எல்லாச் சமயத்தவரும் எடுத்துப்பயிலும் இலக் கணம் நிகண்டு முதலான பொதுநூல்களை ஆக்கும் வழியும் புத்தர் சமணர் அந் நூல்களின் முதலிற் புத்தக்கடவுள் அரு கக்கடவுளுக்கு வாழ்த்து உரையாதிரார். இதற்கு 'வீரசோழி யம்,' 'யாப்பருங்கலம்,' 'யாப்பருங்கலக்காரிகை,' 'நன்னூல்,' 'சூடாமணிநிகண்டு' முதலிய நூல்களின் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களே சான்றாம். மற்றுத், தொல்காப்பியனாரோ தமது

நூன் முகத்தில் அங்ஙனம் புத்தனையாதல் அருகனையாதல் வணங்கக் காணாமையானும், அவர் அருளிச்செய்த பெருநூலாகிய 'தொல்காப்பியத்'துள் ஓரிடத்தாயினும், புத்தக் கடவுள் அருகக்கடவுள் அவர் வகுத்த பௌத்த சமண்மதங்கள் முதலாயினவற்றைப்பற்றிய ஒருசிறு குறிப்புத்தானுங் காணப்படாமையானும், அவ்வாசிரியர் அதன்கட் கூறுங் கொள்கைக் குறிப்புகளெல்லாம் பண்டைக் காலத்தில் இப்பரதநாடெங்கணும் பரவியிருந்த தமிழ்ச் சைவ அந்தண முனிவரின் ஒழுகலாறுகளையும் அவர் தமக்குரிய சைவக் கோட்பாடுகளையுமே தழீஇ நிற்றலானும் அவ்வாசிரியர் பௌத்த சமண்மதங்கள் தோன்றுதற்குப் பல்லாயிர ஆண்டு முற்பட்டிருந்தவராதல் ஒருதலையேயாம். என்றித்துணையும் ஆராய்ந்து காட்டியவாற்றாற் 'படிமை' என்னுஞ் சொல்லாற் குறிக்கப்பட்ட தவவொழுக்கம் பண்டைத் தமிழ்ச் சைவ அந்தணரின் தாபதவொழுக்கத்தையே குறிக்குமென்பதூஉம், அதற்கு முதலான 'ப்ரதிமா' என்னுஞ் சொற் பழைய எசுர்வேதத்தின்கண்ணேயே காணப்படுதலின் அஃதறியாது அதனைச் சமண்மதத்தவர்க்கே உரிய சொல்லாக வரைந்துவைத்து அவ்வாற்றால் தொல்காப்பியனாரைச் சமண் சமயத்தின்பாற் படுக்கலாயினாருரை நுணுகி விரிந்த ஆராய்ச்சியுணர்வில்லாதார்தம் போலியுரையா மென்பதூஉம், தொல்காப்பியனார் ஒன்றுமுதல் ஆறறிவு ஈறாகவைத்து உயிர்களை ஆறு தொகுதியில் அடக்கிய முறைக்கும், சமணர் நிலன் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கிடவகையில் வைத்து உயிர்களைப் பகுத்த முறைக்கும் வேற்றுமை சாலப் பெரிதாகலின் அவ் வியல்புகளெல்லாம் பழைய சமண் நூல் மேற்கோள்கள் கொண்டு முற்ற ஆராய்ந்துபாராது நுனிப்புல் மேயும் யாடுபோல் தாம் அறிந்த சிறிதையே பெரிதாக மயங்கி அம் மயக்கவுணர்ச்சியால் தொல்காப்பியனாரைச் சமணரென்றுரை பொருந்தாதென்பதூஉம், அதுகொண்டு அவர் கி-மு ௩-ஆம் நூற்றாண்டிலிருந்தாரெனல் போலியுரையா மென்பதூஉம் நன்கு விளக்கப்பட்டன.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனாரைக் கிறித்து பிறத்தற்கு முன் முந்நூறும் ஆண்டிலிருந்த பாணினி முனிவர் காலத்திற்கும் பின்னே வைத்தல் வேண்டுமென வரைந்த பார்ப்பனருரை ஆராயற்பாற்று. யாம் 'பண்டைக்காலத் தமிழர் ஆரியர்' என்ற நூலில் ஆசிரியர் தொல்காப்பியனார் இற்றைக்கு நாலாயிரத்து முந்நூறுண்டுகட்கு முன் இருந்தா ரென்று பல ஏதுக்கள் கொண்டு நாட்டிய காலத்தைத், தாமும் பல தக்கசான்றுகள் காட்டி மறுமல், யாம் கூறிய காலக்கணக்கு அளவுக்குமிஞ்சிய தெனவும், ஆகவே அதனை மறத்தல்வேண்டா வெனவும் அப் பார்ப்பனர் மொழிந்தனர். தமிழர் அல்லாத ஆரியர், எகுபதியர், சாலடியர், பாபிலோனியர் முதலியோரெல்லாம் ஐயாயிரம் பதினாயிரம் ஆண்டுகட்குமுன்னரே நாகரிகத்திற் சிறந்து விளங்கினா ரென்று கூறுவ தெல்லாம் அளவுக்கு மிஞ்சிய தாகாது! ஆனால் தமிழர் நாலாயிர ஆண்டுகட்கு முன்னரே இலக்கண இலக்கியங்களுடையராய் நாகரிகத்திற் சிறந்து விளங்கினாரென் றுரைப்பது மட்டுந்தான் இப் பார்ப்பனருக்கு அளவுக்கு மிஞ்சியதாய்த் தோன்றிவிட்டது! இவர் ஏதொரு சான்றுங் காட்டாது, உண்மைச் சான்றுடன் எழுதிய எமதுரையினைத் தாம் கருதுதற்குரித்தன்றென விட்டனரேனும், அறிவான்மிக்கோர் எமதுரையின் மெய்ம்மையும் அவருரையின் பொய்ம்மையும் எளிதிற் றேர்ந்து எம துரையினைக் கைக்கொள்வ ரென்க. அது கிடக்க.

முதலில் இவர் தொல்காப்பியம் இடைச்சங்க நூலென்னும் ஒரு பொருந்தாவுரையைத் தழுவி, அவ் விடைச்சங்கங் கிறித்து ஆண்டுக்கு முன்னும், கடைச்சங்கம் அவ் வாண்டின் துவக்க காலத்திலும் இருந்தனவெனக் கரைந்தார். 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்பான் குமரி நாடு கடல்வாய்ப் புகுவதன்முன் அதாவது இற்றைக்கு ௫000-ஆண்டுகட்குமுன் தலைச்சங்க காலத்தில் இருந்தோனவன் என்பதை மேலே 532-ஆம் பக்கத்தில் விளக்கினம். அவன்மேற்

பாடப்பட்ட செய்யுள் ஒன்றில் 'ஞமன்' என ஞகரத்தை முதலாக உடைய சொல் (புறம், சூ) ஒன்று வரக் காண்கின்றோம். தொல்காப்பியனார் இப்பாண்டிய அரசன் காலத்திலேனும், அல்லது அவர்க்குப் பின்னேனும் இருந்தனராயின், தாம் இயற்றிய இலக்கண நூலில் ஞகரத்தை முதலாகவுடைய சொல்லையுந் தழுவியிருப்பர். ஆனல், அவர் தங்காலத்தில் ஞகரத்தை முதலாகவுடைய சொல் தமிழில் வழங்காமையின், அதனை விலக்கி "ஆ, எ, ஒ எனும் மூவுயிர் ஞகாரத்துரிய" (எழுத்து, சூச) என்று சூத்திரஞ் செய்வாராயினர். இவ்வொரு பெருஞ்சான்று கொண்டே தொல்காப்பியனார் பாண்டியன் முதுகுடுமியின் காலத்திற்கும் அதாவது இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கும் முன்னரே இருந்தாரென்பது நன்கு துணியப்படும். இன்னும், கி-மு மூன்றும் நூற்றாண்டில் அதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுன் தொல்காப்பியனார் இருந்தனராயிற், சிறிதேறக்குறைய அக் காலத்தில் இயற்றப்பட்ட 'பரிபாடற்' செய்யுட்களிற் காணப்படுஞ் 'சகடம்,' 'சடை,' 'சண்பகம்,' 'சமம்,' 'சமழ்ப்பு,' 'சமைப்பின்' முதலான சகர முதற் றமிழ் மொழிகளையும், 'ஞமன்' என்னும் ஞகரமுதற் றமிழ்மொழியினையுந் தழுவியிருப்பர்; ஆனல், அவர்தங் காலத்தில் அச் சொற்கள் வழங்காமையின் ஞகர முதன் மொழி தமிழில் வரா என்று சூத்திரஞ் செய்தாற் போலவே,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ வெனும் மூன்றலங்கடையே" (எழுத்து, சூஉ)

எனச் சகர முதன்மொழிகளுந் தமிழில் வரா எனச் சூத்திரஞ் செய்திட்டார். ஆகவே, இச்சொற்கள் தமிழில் வழங்கிய கி-மு மூன்றும் நூற்றாண்டிற்கும், ஞகர முதன்மொழி வழங்கிய கி-மு முப்பதாம் நூற்றாண்டிற்கும் முன்னே தொல்காப்பியனார் இருந்தமை கன்மேற் கட்டிய அரண்போல் நாட்டப்படு மென்க. எனவே, தொல்காப்பியனார் தலைச்சங்க காலத்தவ ரல்லால், இடைச்சங்க காலத்தவரல்லரென ஓர்ந்துகொள்க.

இனி, அவர், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரச் செய்யுளிற் போந்த "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்பதிலுள்ள 'ஐந்திரம்' என்பதை ஆராயப்புகுந்து, அது வடமொழியிலுள்ள வியாகரணமா மென்றும், அதனை யாக்கிய இந்திரனும், அட்டாத்தியாயியை ஆக்கிய பாணினியும் ஒரே காலத்தவராதல் வேண்டுமென்றும், பாணினி கி-மு மூன்றாம் நூற்றாண்டிலிருந் தவராகலான் ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர் கி-மு மூன்றாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவராதல் வேண்டு மென்றுங் கூறுவதுடன், பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுள் பிற்காலத்தே செய்து தொல்காப்பியத்தில் நுழைக்கப்பட்டதா யிருக்கலாமென்றும் நுவல்கின்றார். இவ்வாறுரைக்கும் உரைகளின் இடையே ஒன்றினுந் துணிவு பிறவாமலுந் தக்க சான்றுகள் காட்டாமலும் முன்னொடுபின் முரணுமாறு இவர் செய்யுங் குழப்பங்கள் பல*.

வடமொழி இலக்கண நூலாசிரியரில் இந்திரனே முதலாசிரியனாவனென்பது தைத்திரீய சம்ஹிதையிற் (எ, ச, எ) சொல்லப்பட்டிருக்கின்றது. 'தைத்திரீய சம்ஹிதை' கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சேர்ந்ததாகையால், அஃது இற்றைக்கு நாலாயிரத்து ஐந்நூறாண்டுகளுக்கு முற்பட்டதென்பதும் மேற்காட்டிய வாற்றால் தானே போதரும். நாகோஜிபட்டரது 'பரிபாஷேந்து சேகரத்' திற்கு உரை யெழுதிய வைத்திய நாதரும் "பழைய வையாகரணிகளாவார் இந்திரன் முதலாயினர்"† என்று அவ்வுரைமுகத்திற் கூறினார். இந்திரனுக்குப் பின்னும் பாணினிக்கு முன்னும் ஒருவர்பின் னொருவராய் வந்த வடமொழி இலக்கண ஆசிரியர் அறுபத்துநால்வ ரென்பது பெறப்படுதலால்‡, ஓர் ஆசிரியர்க்கு முப்பதாண்டு விழுக்காடு வைத்துக் கணக்குச் செய்யவே அறுபத்து நால்வர்க்கும் ஓராயிரத்துத் தொளாயிரத்

* See pages 154-160, 'Dravidian India' by Mr. T. R. Sesha Iyengar, M.A., † Dr. T. Goldstucker's Panini, p. 58; Panini Office Publication. ‡ Dr. A. A. Macdonell's 'A History of Sanscrit Literature,' p. 430.

திருபஃது யாண்டுகள் ஆகின்றன. இனிப் பாணினி முனிவர் இருந்த காலம் கி-மு ௭00-என்று முடிவு செய்யப்பட்டிருத்தலால், வடமொழிமுதல் இலக்கணநூலாசிரியன் இந்திரன் இருந்தது இற்றைக்கு நாலாயிரத்தைந்நூறியாண்டுகளுக்கு முன்னென்பதும் முடிக்கப்படும். ஆரியவேத காலத்தையுங், குமரிநாடு கடல்கொண்ட காலத்தையும், பாரதப்போர் நிகழ்ந்தகாலத்தையுந், தலைச்சங்க காலத்தையுந், தொல்காப்பியனார் காலத்தையும் மேலே பல முகத்தால் ஆராய்ந்து காட்டிய காலக்கணக்கோடு, ஆரிய இலக்கண முதலாசிரியன் இந்திரன் காலமும் ஈண்டுக் காட்டியவாறு கணக்குச் செய்யின் முழுதொத்து நிற்கக் காண்டலால், இவ் வுண்மை முடிபுக்கு மாறாக, இந்திரனும் அவற்கு இரண்டாயிரமாண்டு பிற்பட்ட பாணினி முனிவரும் ஓரே காலத்தினரென்றுரை பெரியதொரு பிழைபாட்டுரையாம் என்க.

அற்றன்று, இந்திரனே பாணினிகாலத் திருந்தவன் அல்லன்; இந்திரன் ஆக்கிய ஐந்திரத்தின்வழிக் கி-பி முதல் நூற்றாண்டிற் செய்யப்பட்ட 'காதந்தரமும்'*, கி-பி ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட 'ஜைநேந்திரமும்'† என்னும் நூல்களே, பனம்பாரனரது சிறப்புப்பாயிரவுரையில் 'ஐந்திரம்' என அவற்றின் முதல்நூற் பெயராற் கூறப்பட்டனவென்று கொள்ளாமோவெனிற், கொள்ளாம்; இப்பரதநாடெங்கணும் உள்ள ஆன்றோராற் பெரிது பாராட்டிப் பயிலப்பட்டு வந்த பழைய விழுமிய இலக்கண நூலாகிய பாணினீயத்தைப் பயிலாது, அருகி மிகச் சிலராற் பயிலப்பட்டு வந்த 'ஜைநேந்திரம்' முதலிய பின்னூல்களைத் தொல்காப்பியனார் கற்று நிரம்பினாரென்றல் ஒவ்வாமையானும், தொல்காப்பியனார் பாணினீயத்திற்குப் பிற்பட்டவராயின் ஒரு முதனிலையிற் பிறந்த பல சொற்களை ஆராய்ந்து அவ்வொரு முதனிலையிற் கொணர்ந்தடக்கும்

---

* Dr. S. K. Belvalkar's Systems of Sanscrit Grammar, p. 83.
† Do Do Do , p. 64.

பாணினீய முறையின் நுட்பமும் பயனும் உணர்ந்து தாமுந் தமிழ்ச்சொற்களை அம் முறையில் ஆராய்ந்தடக்குவரே யன்றி "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" (தொல்காப் பியம், சொல், ௩௯௪) எனக் கூறுராகலானும், ஐந்திரத்தின் வழி வந்த 'காதந்தரம்,' 'ஜைநேந்திரம்' முதலிய நூல்கள் ஒருகாலத் தனவன்றி வெவ்வேறு காலத்தனவாகலின் அவை தம்மையெல் லாந் தொல்காப்பியனார் ஒருங்கு கற்றற்குக் கி-பி ஆறாம் நூற் றாண்டில் இருந்தாலல்லது அவர்க்கு அஃது இயலாமையானும், அவ்வழிநூல்கள் பலவற்றையுங் கல்லாத ஒருவரை "ஐந்திரம் நிறைந்த" என்றல் பொருந்தாமையானும், 'ஐந்திரம்' என்னும் முதல்நூலைமட்டும் பயின்றார் ஒருவரையோ அவ்வாறு "ஐந்தி ரம் நிறைந்த" என்றுரைத்தல் ஏற்புடைத்தாமாகலானும், திரு நாவுக்கரசுநாயனா ரிருந்த கி-பி ஆறாம் நூற்றாண்டி லிருந்து தொல்காப்பியனார் நூல் செய்தனராயின் அக்காலத்திற் பெரி தும் பரவிவழங்கிய 'கட்டளைக்கலித்துறை', 'பல்வகை விருத் தப்பாக்கள்' முதலியவற்றிற்கும் ஏனைச்சொற்கள் சொற்றொடர் கட்கும் இலக்கணங்கூறல் இன்றியமையாததாகவும் அவற்றுள் ஒருசிறிதாயினும் அவர் உரைபாமையானும், பௌத்தம் சமண மம் முதலான மதக்குறிப்புகளாதல் அம் மதத் தெய்வங்களா தல் அவரால் ஓர் எட்டுணையுஞ் சுட்டப்படாமையானுந், தொல் காப்பியனார் நுவன்ற இலக்கணங்கள் அத்துணையும் மிகப் பழைய அதாவது ஐயாயிர ஆண்டுகட்கு முற்பட்ட செந்தமிழ்ச் சொற்பொருள் வழக்குகளையே குறிப்பனவா யிருத்தலானுந், தொல்காப்பியனார் பயின்ற 'ஐந்திரம்' என்பது ஆரியத்தில் முதல் இலக்கண ஆசிரியனாகிய இந்திரன் செய்த நூலேயா மென்று கோடலே தொல்காப்பியனாரிருந்த மிகப் பழையகாலத் திற்கு இசைவதொன்றா மாகலானும், பனம்பாரனார் மொழிந்த 'ஐந்திரம்' இந்திரன் ஆக்கிய முதல்நூலேயாகுமன்றி அதற்குப் பன்னெடுங்காலம் பின்னெழுந்த 'காதந்தரம்' முதலியனவாகா வென்று கடைப்பிடித் துணர்ந்துகொள்க.

இனி, ஆங்கில ஆசிரியர் சிலரது கோட்பாட்டைத் தழீஇப் பாணினி முனிவர் கி-மு மூன்றும் நூற்றாண்டில் இருந்தாரென அவர் மொழிந்ததூஉங் கொள்ளற்பாலதன்று. ஐரோப்பிய ஆசிரியருள்ளும், நம் பரதநாட்டுக் கற்றாருள்ளும் வடமொழிநூற் கால அளவைகளைக் கணக்கிட்டார் தொகை இருதிறப்பட்டு நிற்கின்றது. அவருள் ஒருசாரார் மிகப் பழைய இருக்குவேதப் பாட்டுகளுக்கே கி-மு ௧௩00-க்குமேற் பழமை சொல்ல ஒருப்படுகின்றிலர். மற்றொருசாரார் அவை தமக்குக் கி-மு ௪000-க்கு மேற் பழமை சொல்வர்*. இப்போது காளிகட்டத்தின்கண் ஓர் அறிஞர் இருக்குவேதப் பதிகங்கள் பல இற்றைக்கு முப்பதிணாயிர ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டனவாகுமென்று அரிய பல சான்றுகள்கொண்டு விளக்கிவருகின்றார்†. இங்ஙனமே மாபாரதப்போர் நிகழ்ந்த காலமும், பாணினிமுனிவர் காலமும் இருதிறப்படுத் துரைக்கப்படுகின்றன. இவைதம் பழமைகளைக் குறைத்துக் கூறுவார்தங் காலக்கணக்குப் பழைய தமிழ் நூலாராய்ச்சிக்கும், ஏனை எகுபதியர், சாலடியர், எபிரேயர் முதலான மக்களின் நாகரிகப் பழமைக்கும் இசைந்துவாராமையின் அஃது உண்மையுடையதாகாது. இருக்குவேத முதலியவற்றின் மிகப் பழைய காலத்தை உண்மையாராய்ச்சியாற் கண்டுரைப்பார்தங் காலக்கணக்கே, பழந் தமிழ்மக்களின் பண்டை நாகரிக வரலாற்றோடு ஒத்துநிற்கக் காண்டலின் அதுவே உண்மையென்று கொள்ளற்பாற்று. ‘என் பகைவற்கு இரண்டு கண்கள் கெடுவதாயின், எனக்கு ஒரு கண் கெடினுங் கெடுக’ என்னும் அழுக்காறுடையான்போல், தமிழ் நூல்களின் பழமையைக் குறைத்துவிடுதற்கு உதவுமாயின் வடநூல்களின் பழமை

* Dr. Hermann Jacobi in Indian Antiquary, Vol. XXIII, pp. 154 sq., Mr. B. G. Tilak in ‘The Arctic Home in the Vedas.’ and Dr. Bloomfield.

† Dr. Abinas Chandra Das, M.A., Ph.D., in his ‘Rig Vedic India’.

யுங் குறையினுங் குறைகவென்று பார்ப்பனர் சிலர் அழுக்காற்ருற் கருதுகின்றனர். இதற்குத், தொல்காப்பியனுரைக் கி-மு இரண்டாம் நூற்ருண்டிற் படுப்பிக்கவேண்டிய பார்ப்பனர், கி-மு முப்பதாம் நூற்ருண்டிற்கு முன்னிருந்த ஐந்திர ஆசிரியன் இந்திரனையுங், கி-மு ஏழாம் நூற்ருண்டிலிருந்த பாணினி முனிவரையுங் கி-மு மூன்ரும்நூற்ருண்டிற் படுப்பித்ததே சான்ரும். பாணினிமுனிவர் காலத்தைப்பற்றித் தமக்குமுன் ஆராய்ந்தார் முடிபுகளையெல்லாந் திரும்பவும் நுணுகி யாராய்ந்து, அவரது காலங் கி-மு ஏழாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டதாதல் ஒருவாற்ருனும் இசையாதென்று கிருஷ்ணபேல்வால்கர் என்னும் அறிஞர் 'சமஸ்கிருத வியாகரணவகைகள்'* என்னுந் தமது நூலில் நன்கு விளக்கியிருத்தல் காண்க.

இன்னும் அப்பார்ப்பனர், பனம்பாரனர் உரைத்த பாயிரவுரை தமது கோட்பாட்டிற்கு இடர்விளைத்து அதனைப் பாழ்செய்தல் கண்டு, அது பிற்காலத்தெழுதித் தொல்காப்பியத்துள் நுழைக்கப்பட்டதா யிருக்கலாமென்று மெல்லக் கரைந்தார். இப்போதுள்ள உரைகளில் மிகப் பழையதாகிய நக்கீரனர்தம் 'இறையனரகப்பொருளுரை' முகத்திலேயே "வடவேங்கடந் தென்குமரியாயிடை" என்பது தொல்காப்பியத்தில் உளதாகக் குறிக்கப்பட் டிருத்தலானும், அவர்க்குப் பின்வந்த இளம்பூரணர், பேராசிரியர், நச்சினர்க்கினியர் முதலான எல்லா உரைகாரரும் அதனைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரச் செய்யுளென்றே மொழிதலானும், அப் பாயிரச்செய்யுள் இயற்றினர் தொல்காப்பியனர் என்று களவியலுரையும் தொல்காப்பியனரோடு ஒரு சாலை மாணக்கராய பனம்பாரனர் என்று ஏனையுரைகளுங் கூறுதல்கொண்டு அப் பாயிரச்செய்யுள் இயற்றி

* 'Systems of Sanscrit Grammer' by Mr. S. Krishna Belvalkar, M.A., Ph.D., p. 18. Dr. Goldstucker, Prof. Bhandarkar and Dr. Vincent Smith long ago assigned 7th century B. C. to Panini.

ஞர் பெயர் ஐயுறவுக்கு இடனாயிருப்பினும் எல்லாஉரைகாரரும் அதனைத் தொல்காப்பியத்தில் உள்ள தெனக் கிளத்தலின் ஆண்டு அதன்கண் ஐயுறுதற்கு இடன் இன்மையானும், அது பிற்காலத் தெழுதி நுழைக்கப்பட்ட தென மெல்லக் கிளந்தார் உரை பொய்யுரையேயாமென விடுக்க.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தைக் கி-மு இரண்டாம் நூற்றாண்டிற் படுப்பித்த பார்ப்பனருரையாலுந் தொல்காப்பியம் இரண்டாயிர ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடைத் தென்பது போதரலால், அவ்வளவு பழமைகூட அதற்குச் சொல்லுதற்கு மனம் பொருத மற்றொரு பார்ப்பனர், தொல்காப்பியனார் அறிந்த 'ஐந்திரம்' என்பது 'ஜைநேந்திரமே' என நாட்டுதற்குப் புகுந்து, சிலப்பதிகாரத்தில் அதற்குச் சான்றுகள் தேடிக் காட்டுவாராய்ப்,

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழு நூல் எய்துவிர்" என்வும்,
"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டியற்கை விளங்கக்காணாய்" எனவும் போந்த 'சிலப்பதிகார' அடிகளிற் குறிக்கப்பட்ட இந்திரன் நூல் 'ஜைநேந்திரமே' எனப் புகன்றார்.

மேற்காட்டிய அடிகள் சிலப்பதிகாரத்தின் 'காடுகாண் காதை'யில் இருக்கின்றன. மதுரைக்குச் செல்லும் வழிகேட்ட கோவலனுக்கு, அவனை எதிர்ப்பட்ட ஒரு மறையோன் அவ்வழியின் அடையாளங்களைச் சொல்லிக்கொண்டு போம்பொழுது, அழகர்மலையின் பக்கத்தே மூன்று பொய்கைகள் உள, அவற்றுட் " 'புண்ணியசரவணம்' என்னும் பொய்கையில் நீராடுவிராயின் வானவர்க்கு அரசனான இந்திரன் இயற்றிய சிறந்த நூலினுட்பொருளை உணரப் பெறுவீர்" என்றுகூறக், கோவலனுடன் இருந்த கௌந்தியடிகள் அச்சொற்கேட்டு "ஆயுட் கற்பத்தினையுடைய அவ்விந்திரன் இயற்றிய நூலின் மெய்ப்பொருளை அருகன் அருளிச் செய்த பாட்டியலில் விளங்க அறிவாயாக" என

அறிவுறுத்தினரென்பதே மேலையடிகளின் பொருளாகும்; விண்ணவர்கோமானாகிய இந்திரன் இயற்றியநூலென்பது 'ஐந்திரவியாகரணமே' யென இவ் வடிகளுக்கு உரையெழுதிய அரும்பதவுரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் மொழிந்தனர்; இவ்வுரைகளிலன்றிச், சிலப்பதிகாரநூலில் எங்கும் 'ஐந்திரம்' என்னும் பெயர் காணப்படவில்லை. உரைகாரர் கூறியவாறே யெடுப்பினும், 'ஐந்திரம்' இந்திரன் இயற்றிய நூலென்றே மேலையடிகளிற் பெறப்படுகின்றதல்லாமற், 'பத்ரபாகு' என்னுஞ் சமண் முனிவன் இயற்றிய 'ஜைநேந்திரம்' என்பது அவற்றின்கட் சிறிதும் பெறப்படவில்லை; சிறிது தமிழறிவுடையார்க்கும் மேலையடிகளின் பொருள் இதுவேயாதல் தெற்றென விளங்காநிற்கும். 'கப்பம்' என்னுஞ் சொல் நீண்டவாழ்நாள் எல்லையினைக் குறிக்கும் 'கல்பம்' என்னும் வடசொல்லின் திரிபாகுமென்றே உரைகாரிருவருங் கூறினர்; அதன் உண்மைப்பொருள் அவ்வாறிருக்கத், தங்கருத்து நிரம்புதற் பொருட்டு அச் சொல்லுக்குக் 'கல்பசூத்திரம்' எனப்பொருள் செய்து, 'பத்ரபாகு என்னும் முனிவன் செய்த கல்பசூத்திரத்திலே இந்திரன் ஆக்கிய ஐந்திர வியாகரணத்தின் உண்மை காணுமோ' என அப் பார்ப்பனர் அவ்வடிகளுக்கு உரை யுரைத்துக்கொண்டார். 'ஜைநேந்திரம்' என்னும்நூல் பூஜ்யபாதர் என்னுந் தேவநந்தியாற் கி-பி ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதேயல்லாமற் கி-மு நான்காம் நூற்றாண்டிலிருந்த பத்ரபாகுவினாலாவது, கி-மு ஆறாம் நூற்றாண்டி லிருந்த மகாவீரராலாவது இயற்றப்பட்ட தன்று. 'தனஞ்சயகோசம்' என்னும் 'ஜைநஹரிவம்ஸ' நூலும், போபதேவரென்னும் ஹேமசந்திரரும் 'பூஜ்யபாதரென்னுந் தேவநந்தியே ஜைநேந்திரம் இயற்றினராவர்' எனக் கூறுமாற்றால் இவ்வுண்மை நன்கு விளங்கும்; பூஜ்யபாதரே 'ஜைநேந்திரத்'தின் ஆசிரியராவ ரெனப் 'பேல்வால்கரும்' முடித்துக் கூறினர்*. இனி, 'ஜைநேந்திரம்' இயற்றப்பட்டகாலங் கி-பி ஐந்தாம் நூற்

* 'Systems of Sanscrit Grammar,' p. 63.

றுண்டின் பிற்பகுதியாமென்பதும் அவரால் நன்கு காட்டப்பட்டது*. கி-பி இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இலங்கையை ஆண்ட 'முதற்கயவாகு' மன்னன், சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் காலத்தில் இருந்தவன் என்பது சிலப்பதிகார நூலினுள்ளேயும்† குறிக்கப்பட்டிருத்தலால், ஜைநேந்திரம் இயற்றப்படுதற்கு உ௫O-ஆண்டுகளுக்கு முன்னரேயுள்ள சிலப்பதிகாரத்திற், பிற்பட்ட அச்சைநேந்திர நூல் குறிப்பிடப்பட்டதென்றல் யாங்ஙனம் பொருந்தும்? 'மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிப்போடுதலோடு' ஒப்ப, இயைபு சிறிதுமில்லாதவைகளை இயைத்து வைப்பதில் இப்பார்ப்பனரன்றி மற்று எவர் வல்லார்! அது நிற்க.

மேற்காட்டிய சிலப்பதிகார அடிகளிற் குறிக்கப்பட்டது 'ஜைநேந்திரம்' என்னும் வடமொழியிலக்கணம் ஆதல் செல்லாதென்றது ஒக்கும்; பழைய 'பிராதிசாக்கியங்'களையும், 'ஐந்திரத்'தையும் பின்பற்றிச் செய்த 'காதந்தரம்' என்னும் வியாகரண நூல், தக்கணத்திற் கி-பி முதல் நூற்றுண்டில் அரசுபுரிந்த 'சாதவாகனன்' காலத்ததாகலின், அதுவே அச் சிலப்பதிகார அடிகளிற் சுட்டப்பட்டதாகு மென்று கொள்ளாமோவெனிற்; கொள்ளாமன்றே; என்னை? அங்கே சுட்டப்பட்டது விண்ணவர் கோமான் இந்திரன் இயற்றிய நூலேயல்லாமற் பிறிதன்று; வெளிப்படையாகச் சுட்டப்பட்டதொரு நூலைவிடுத்துச், சுட்டப்படாததொன்றனை ஆண்டுக்கொணர்ந்து பிணைத்தல் பெரிதுங் குற்றமாகலினென்க.

அற்றாயினும், இந்திரன் ஆக்கிய நூற்பொருளை அருகதேவன் அருளிய ஆகம நூல்களிற் பரக்கக்காணலாம் என்று கௌந்தியடிகள் கூறும் பின்னிரண்டடிகளைக்கொண்டு, ஐந்திர நூற் பொருளை அகத்தடக்கிய சமண்நூல்கள் சிலப்பதிகாரத்திற்கு முன்னரே உளவாதல் பெறப்படுமாலோவெனிற், கூறு

* 'Systems of Sanscrit Grammar,' p. 64.

† வரந்தருகாதை, கசுO.

தும்: மேலே குறித்த சிலப்பதிகார அடிகளில் இந்திரன் ஆக்கிய நூல் என்று பொதுவகையாற் குறிக்கப்பட்டிருப்பதற்கு 'ஐந்திரவியாகரணம்' எனச் சிறப்புவகையாற் பொருள் செய்வது யாங்ஙனம் பொருந்தும்? இளங்கோவடிகள் வேறியாண்டேனும் இந்திரன் ஆக்கியது ஐந்திரமே எனக் கூறினரா? இல்லையே. அவ்வாறிருக்க, அவ்வடிகளிற் சுட்டியது ஐந்திரவியாகரணமே என்ற உரைகாரருரை பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை. மற்றுக், கௌந்தியடிகள் மொழிந்த விடையை உற்று நோக்குங்காற், சமண்சமயக் கோட்பாடுகள் பொதிந்த ஒருநூல் இந்திரன்எனப் பெயரிய ஓர் அரசனால் இயற்றப்பட்டு முன்னரே யுளதாயிற்றென்பதே அதனாற் போதரும். அருகதேவன் அருளிச் செய்த ஆகமம் என்பது வீட்டுநூற்பொருளை யறிவுறுத்துவதாயிருத்தல் வேண்டுமேயன்றி, இலக்கணமாகிய கருவிநூற் பொருளை யறிவுறுத்துவதாய் இருத்தலாகாது; ஆகவே, அவ்வாகமப் பொருளோடு ஒப்பச் செய்த இந்திரன் நூலும் வீட்டு நூற் பொருளையே யுணர்த்துவதாயிருத்தல் வேண்டுமென்று தெளிந்து கொள்க. ஆகவே, மேலே காட்டிய சிலப்பதிகார அடிகளிற், சமண்முனிவர் செய்த வடமொழியிலக்கண நூலாகிய ஜைநேந்திரஞ் சுட்டப்பட்டதெனக் கரைந்த பார்ப்பனருரையும், அவரோடொப்பக் கூறும் ஏனையோருரைகளும் பொள்ளற்பட்டுப் போலியாயொழிந்தமை காண்க. அவை அவ்வாறொழியவே, ஐந்திரம் நிறைந்த ஆசிரியன் தொல்காப்பியனைச் சமண்மதத்திலும், அம்மதத்தவர் இருந்த கி-பி ஆறாம் நூற்றாண்டிலும் படுப்பிக்க முயன்றார் முயற்சியும் புரைபட்டொழிந்தமை காண்க.

இனி, இலங்கைத்தீவின் வரலாற்றிற் சொல்லப்பட்ட மூன்று கடல்கோள்களிற் கி-மு மூன்றாம் நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்றாங் கடல்கோளுக்குச் சிறிது முன்னரேதான் 'தொல்காப்பியம்' இயற்றப்பட்டதாதல் வேண்டுமென்ற மற்றொரு பார்ப்பனருரையின் பெற்றியினை ஆராய்வாம். மூன்றில் முதற்

கடல்கோள் கி-மு உரு அஎ-இல் நிகழ்ந்த தென 'இலங்கை வரலாறு' கூறுநிற்ப, அதற்குமுன் 'தொல்காப்பியம்' இயற்றப் பட்டாதாகுமென உரையாமல், மூன்றுங்கடல்கோளுக்கு முன்னர்த்தான் அஃதியற்றப்பட்டதெனக் கூறுதற்கு அவர் காட்டிய ஏது வென்னை? ஒன்றுமேயில்லை. மேலே யாம் பலவாற்றானும் விளக்கிக்காட்டிய பகுதிகளால், தொல்காப்பியங் 'குமரிநாடு' கடல் கொள்ளப்படுமுன் இயற்றப்பட்ட தொன்றென்பது பெறப்படும். குமரிநாடு இருந்த முதலூழிக்கட் செய்யப்பட்ட **செங்கோன்றரைச்செலவு** என்னும்நூலின் மிகப்பழையவுரையில் "பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ்தெங்க நாட்டு முத்தூர் அகத்தியன்" எனவும், "முதலூழி, முன்கடல் கொள்ளப்பட்ட பெரும்பரப்புத் தமிழ் நிலம்" எனவும் போந்த உரைக் குறிப்புகளாற், பஃறுளியாறு பாய்ந்த குமரிநாடு மிகப் பெரியதொரு நிலனுமிருந்ததென்பது புலனும். இவ்வுண்மை,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரத்துந் தெளித்துக் கூறப்படுதல் காண்க. இவ்வடிகளுக்கு உரையெழுதிய 'அடியார்க்கு நல்லாரும்,'

"அக்காலத்து அவர் நாட்டுத் தெல்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும், குமரி யென்னும் ஆற்றுக்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ் முன்பாலைநாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ் குறம்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடுங் காடும்பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றார்" என்று கடல்கொண்டொழிந்த பெருநிலப் பரப்பாகிய குமரிநாட்டின் வகைகளெல்லாம் விரித்துரைத்தார். இஞ்ஞான்று கிடைக்கப்பெறாத அரிய

பெரிய தமிழ்நூல்கள் பற்பலவற்றை நன்காராய்ந்துணர்ந்த இவ்வுரைகாரர் உரைத்த குமரிநாட்டின் பெரும் பரப்பு, மேலே காட்டிய செங்கோன்றரைச் செலவின் உரையாசிரியர் கூற்ருேடு பெரிதொத்து நிற்றல் காண்க. இங்ஙனமே 'களவியல்' முகவுரை யுரைகாரரும், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், 'கலித்தொகை'யில் ௧0௪-ஆம் கலியின் ஆசிரியரும் பெரும்பாலும் ஒத்துரைப்பர்: இவருட் சிலர் கூறுவன சுருக்கமாயும், வேறு சிலர் கூறுவன விரிவாயும் இருக்கும்; அடியார்க்கு நல்லார் பண்டை நூல்கள் பலவற்றை நன்காய்ந்த பெரியாராகலின், அவர் இவ்வரலாற்றைப் பழைய நூற் சான்றின்றி விரித்துரையார்; இவருரையிற் கண்ட 'ஏழ்தெங்கநாடு' செங்கோன்றரைச் செலவு என்னும் முதலூழிநூலின் உரையிற் காணப்படுதலோடு, 'எழுநூற்றுக்காவதவாறு' என்பதனுற் பெறப்பட்ட பெருநிலப் பரப்பும் அப் பழையவுரையிற் குறிக்கப்பட்டமை காண்க. 'பெருந்தமிழ் நிலமாகிய குமரிநாடு கடல்வாய்ப்புக்க செய்தி' தொன்றுதொட்டு நூலாசிரியர் உரையாசிரியர்களால் வரலாற்றுமுறைவழாமல் உரைக்கப்பட்டு வராநிற்கவும், அடியார்க்கு நல்லார் காட்டியவாறு அத்துணைப் பெருநிலங் கடல்நீரால் விழுங்கப்பட்டது மக்கள் தோன்றுதற்கு எத்தனையோ நூறுயிர ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததாதல் வேண்டுமேயன்றி ஐயாயிர ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தது ஆகாதெனவும், அவருரைத்தவுரை அவரே கட்டிய பொய்யுரையா மெனவும், கடல்கொண்ட அத் தமிழ்நிலம் ஒரு சிற்றளவினதேயா மெனவும் வேறொரு பார்ப்பனப் புலவர் செந்தமிழ் ௧௪-ஆந் தொகுதியின் ௧௧, ௧௨-ஆம் பகுதிகளில் எழுதினர்.

இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கேயுலவும் 'இந்திய மாக்கடல்' பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் பெருநிலனு யிருந்த தென்பது இஞ்ஞான்றை 'நிலநூல்' வல்லார் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றேயாம். இப்பார்ப்பனர் தாமும் அதனை உடம்படுகின்றார். அப்பெருநிலப் பரப்பைக் கடல் நீர் விழுங்கியதும்

இப் பார்ப்பனர்க்கும் ஏனை இயற்கைநூல் வல்லார்க்கும் உடம்பாடாவதேயாம்*. பண்டைக்கால மக்கட்பகுதியாரின் வரலாறுகளை ஆராய்ந்து நூலெழுதினரில் மிகச்சிறந்தாரான **ஜான் லப்பக்** என்னும் ஆசிரியர், நிகிரோவர் என்னும் மக்களின் பண்டை வரலாற்றினை நன்காய்ந்து பார்த்துப் பின்வருமாறு முடிபு கூறுகின்றார்:-

"'நிகிரோவர்' ஆப்பிரிக்காதேயத்திற் 'சகாரா' என்னும் பாலைநிலத்திற்குத் தெற்கேயுள்ள நாடெங்கும் உறைகின்றனர்; அப்பாலைவெளியை அவர்களாவது மற்றைவிலங்கினங்களாவது கடந்து சென்றதேயில்லை; இம்மக்கள் அரேபியா, பாரசிகம், இந்துஸ்தானம், சீயம், சீனம் முதலிய நாடுகளிலும் யாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தீவுகளிலுங் காணப்படாவிடினும், மடகாஸ்கர், அந்தமான் தீவுகள், மலாய்நாடு, பிலிப்பைன், புதுக்கினியா, புதுஹீபிரிட்ஸ், புதுக்காலிடோனியா, பிஜித் தீவுகளிலுந், தாஸ்மானியாவிலுங் காணப்படுகின்றனர். இவர்கள் கப்பலேறிச் செல்லும் வழக்கமுடையரல்லராகையால், இவர்கள் மேற்கூறிய நாடுகளிலும் தீவுகளிலும் பரந்து காணப்படுதற்கு, ஆப்பிரிக்காவின் கீழ்கரையிலிருந்து இந்தியமாக் கடலினூடே நெடுகத்தொடர்ந்து நீண்டுகிடந்த தீவுகளாவது அல்லது மிகப்பெரிய நிலமாவது இருந்ததாகல் வேண்டும். அப்போது இந்தியமாக்கடல் இப்போதுள்ள சகாரா பாலைநிலத்தில் நின்றலவினதாயிருத்தல் வேண்டும்†." என்று அவ்வியற்கை நூற் பேரறிஞர் பெரிதாராய்ந்துரைக்கும் மெய்யுரையால், இப்போதுள்ள இந்தியமாக்கடலின் ஒரு பெரும்பகுதி பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் ஒரு பெருநிலமாயிருந்ததென்பது உம், அந்நிலத்தின்கண் உறைந்த மக்களின் கால் வழியில் வந்தோரே இப்போது ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியமாக்கடலின் நெடுக ஆங்காங்குள்ள தீவுகளிற் சிதர்ந்து காணப்படும் நிகிரோவராவரென்

* See 'The Tamilian Antiquary,' Vol. II, No. 1.

† 'Pre-Historic Times' by Sir John Lubbock, p. 363.

பதூஉம் இனிது பெறப்படுகின்றன வல்லவோ? இனி, இப்பெரு நிலப்பரப்பு முழுதும் ஓரே காலத்திற் கடல்நீரால் விழுங்கப்பட்டதெனக் கோடல் பெரியதொரு பிழைபாடாம். சகாரா என்னும் பாலைநிலத்தின்கண் நின்ற கடலே, நிலவுருண்டையின் மையத்தே காலங்கடோறுந் தோன்றும் அதிர்ச்சிகளின் அளவுக்குத்தக்கபடி அவ்விடத்தைவிட்டுப் பெயர்ந்து குமரிநாட்டை மெல்ல மெல்ல விழுங்கியதாகும். சகாரா நிலத்தின்சுற்றளவு காற்கோடி மைல் ஆகும்; இந்தியமாக்கடலின் சுற்றளவோ இரண்டரைக் கோடி மைல் ஆகும். ஆகவே, சகாராவில் நின்ற கடல்நீரால் விழுங்கப்பட்ட குமரிநாட்டின் சுற்றளவு சிறிதேறக்குறைய இருபத்தைந்து இலட்சம் மைல் உள்ளதாகும். சகாராவின் நீளம் மூவாயிரம் மைல் என்று கணக்கிடப்பட்டிருத்தலாற், குமரிநாட்டின் நீளமும் மூவாயிரம் மைலாகுமென்றும், அதன் அகலம் எண்ணூறு மைலுக்குக் குறையாதென்றுங் கணக்குச் செய்தல் இழுக்காது. கடல்கொண்ட நாற்பத்தொன்பது நாடுகளும் ௭௦௦-காவதம் பரப்புள்ளன என்று அடியார்க்கு நல்லார் கூறியதை ஆராயப்புகுந்த அப்பார்ப்பனர், குமரிமுனைக்குந் தென்றுருவத்திற்கும் இடையேயுள்ள அகலம் ஏழாயிரமைலிற் குறைந்துளதாகலின், எழுநூறு காவதம் அல்லது ஏழாயிரமைல் கடல்கொண்டதென்ற அடியார்க்கு நல்லாருரை பொருந்தாதென்றார். அகலத்தில் ஏழாயிரமைல் என்பது அடியார்க்கு நல்லாருரையிற் பெறப்படாமையின், அவ்வாறு பொருள்செய்த அப் பார்ப்பனருரையே பொருந்தா வழுவுரையாமென்க. அடியார்க்கு நல்லார் உரைத்த அப் பரப்பின் அளவு ஏன் நீளத்தையே சுட்டுவதா யிருத்தலாகாது? என்று வினவுவார்க்கு அவர் விடைகூறுமாறு யாங்ஙனம்? குமரி என்னும் யாற்றுக்கும் பஃறுளி யென்னும் யாற்றுக்கும் இடையேயுள்ள நிலம் ௭௦௦-காவதமுளதென்ற வளவானே, அஃதகலத்தின் அளவையே சுட்டுவதென்றல் பொருந்துமோ? அவ்விரண்டு யாறுகளைச் சுட்டிக் கூறினமையானே அவற்றினிடைப்

னுடன் பேரவை தொடங்கியது. மக்களின் பெருங்களிப்பிற்கிடையே தனித் தமிழ்க் கடல்கடந்த அடிகள் தலைமை பூண்டார்கள். அதன்பின் சைவத் திருவாளர், சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T., அவர்களால் 'தமிழருந் தமிழும்' என்பது ஆராய்ச்சியுடன் தெள்ளத்தெளியக் கேட்போர் விரும்பக் கூறப்பட்டது. அதன்பின் திருவாளர், சின்னையநாயகரவர்களால் 'குருபக்தி' யென்பது கூறப்பட்டது. அதன்பின்னர்த் தலைவரவர்கள் $2\frac{1}{2}$ மணிநேரம் வரையில் தம்முடைய இன்பந்தரும் குரலினால் கேட்போர் இதுவரையிற் கண்டுங் கேட்டுமிராத தேன்மழை பெய்தாற்போல் செவ்விய பொருள்கள் உண்மையான சான்றுகளைக்கொண்டு கேட்பவருள்ளத்திற் பதியப் பொழிந்து அளவிலாத பேரின்பந் தந்தருளினார்கள். அன்றைய பேரவை அவ்வளவுடன் நிறைவுற்றது.

மீண்டும் மூன்றாம்நாள் 19—2—27 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மூவாயிரம் மக்கள் பந்தல்முழுவதும் நிறைந்திருக்கப் பேரவை தொடங்கியது. உடனே அவையோர் மகிழ்வடையத் தலைவரவர்கள் தலைமைதாங்கினர். தமிழ்மறையோதப் பெற்றது. பின்னர்ச் சிவபெருமான் திருத்தொண்டினிடத்துப் பெருவிருப்பும், நெகிழ்ந்த நெஞ்சுமுடைய சைவத் திருவாளர் சரவண முதலியாரவர்களால் 'அப்பூதியடிகள்' என்னும் வரலாறு மிக அன்பாகக் கூறப்பட்டது. கேட்டோரெல்லாம் நெஞ்சமுருகி விழிநீர் பெருக்கினர். பின், சைவ சமயத் திருத்தொண்டரும், பச்சையப்பன் காலேஜ் தமிழாசிரியரும் ஆன சைவத் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களால் 'பக்தியோகம்' என்பது கேட்போர் வியந்து பாராட்டும்படி கூறப்பட்டது. அவ்வளவுடன் அன்றைய காலை யவை நிறைவுற்றது. மீண்டும் அன்றைய மாலை மூன்று மணிக்கு நான்காயிரம் மக்களுக்குமேல் கூடியிருந்தனர். அப்போது பந்தலும் இடமும் போதாமல் பக்கத்திலுள்ள கீற்றையும் பிரித்துவிட்டும், போதிய இடமில்லாமல் பலர் நின்றுகொண்டுமிருந்தார்கள். பேரவை தொடங்கியது. தலைவரவர்கள் வரவு பேராவாவுடன் எதிர்பார்க்கப்பட்டது. அவைத்தலைவரவர்களும், மக்களின் மட்டிலடங்கா மகிழ்ச்சியினிடையே தலைமைபூண்டனர். தமிழ்மறையோதப்பெற்றது. திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்களால் 'சமய'மென்பதுபற்றியும், திருச்சி செட்டில்மெண்ட் ஆபீஸர், திருவாளர் காந்திமதிநாதபிள்ளை B.A., அவர்களால் 'தமிழர் திருமறை' என்பது பற்றியும், சைவத் திருவாளர், சி. கே. சுப்பிரமணிய முதலியார் B.A., வக்கீல் அவர்களால் 'தற்கால சமயநிலை' என்பதுபற்றியும், சைவத் திருவாளர், மா. ரா. குமாரசாமி பிள்ளையவர்களால் 'சேந்தனார் அருமையும் வேந்தனார் பெருமையும்' என்பது பற்றியும் விரிவுரைகள் மிக அழகாகக் கூறப்பட்டன. அதன்பின் அடிகளவர்கள் தம்முடைய யாழினுமினிய குரலினால் மூன்றரை மணிநேரம் வரையில் மாணிக்கங்களாலும் விலையிடமுடியாத சொற்களால் நோக்க நோக்க ஆழ்ந்த கருத்துகள் விளங்க இதுவரை எவராலுங் கண்டுபிடிக்கப்படாத ஆராய்ச்சிகளுடன் பலப்பல நுண்பொருள்களை எளிதில் விளங்குமாறு எடுத்துக் கூறியருளினார்கள். அப்போது அங்கு கூடியிருந்த மக்களெல்லாருடைய எண்ணங்களும் வேறொரு பொருளில் செல்லாமல் ஒரு வழிப்பட்டிருந்தன. தலைவர் பேசிய மூன்றரை மணிநேரம் வரையில் அக் கூட்டத்தில் ஒரு சிறிய ஒலியுங் கேட்கவில்லை. ஒருவரும் எழுந்து போகவுமில்லை. சுருங்கக் கூறுமிடத்துக் கேட்டவர்களெல்லாம் தம்மை மறந்து தலைவரவர்கள் பேச்சிலேயே கருத்தாயிருந்தார்கள். தலைவரவர்களின் முடிவுரையின்பின் மூன்று நாட்களிலும் பேசியவர்களுக்கெல்லாம் மாலை போடப்பட்டு வணக்கங் கூறப்பட்டு வந்திருந்தவர்கட்குக் கற்கண்டு, சந்தனம், வெற்றிலைபாக்கு முதலியன வழங்கப்பட்டு எல்லாம்வல்ல சிவபெருமானருளால் அன்றைப் பேரவையும் இனிது முடிந்தது.

வே. திருநாவுக்கரசு.

ஓம்

# தமிழ்ச் சிவஞானபோதச் சிறப்பு

இப்பெயர்பூண்ட ஒருசிறு சுவடி, அதன் ஆக்கியோர் திரு V. P. காந்திமதிநாத பிள்ளை, B.A., அவர்களால் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதற்காக அவர்கட்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றேம். இவர்கள் அம்பாசமுத்திரத்தில் வழக்கறிஞராயிருத்தலால், நடுநின்று தக்க சான்றுகளோடு இச் சுவடியை எழுதியிருப்பாரென்னும் நம்பிக்கையோடு இதனைத் திறந்து பார்வையிட்டேம். யாம் எதிர்பார்த்ததற்கு மாறாக, இச் சுவடி பொருந்தாக் கொள்கைகள் பல உடைத்தாய்ச், சான்றுகள் தக்கவாறு காட்டாமல், உண்மைச் சான்றுகட்கு மாறுபட்டுக், கட்டுக்கதைகளைத் துணையாக்கொண்டு, எழுதப்பட்டிருத்தல் கண்டு வியப்பும் வருத்தமும் உற்றேம். இதன்கண்உள்ள வழுக்களைக் காட்டுதல் பலர்க்கும் பயன்றருமெனக் கருதி, அவற்றை ஆண்டுள்ள அடைவே ஈண்டு எடுத்துக் காட்டி எமது கருத்தையும் விளக்குதும்.

“வேதம் பசு அதன்பால் மெய் ஆகமம் நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய்—போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்” என்னுஞ் செய்யுளை, இற்றைக்கு 21-ஆண்டுகட்குமுன் யாமெழுதிய ‘சைவசித்தாந்தஞானபோதத் திற் ‘சிவஞானபோதம்’ என்னும் விரிவுரைக்கு முதலாக்கொண்டு, சிவஞானபோதத்தின் அருமை பெருமைகளை எடுத்து விளக்கிவைத்தேம். இச் செய்யுளையே இப்போது இவரும் முதலாக்கொண்டு இச் சுவடியை வரையலுற்றார். சான்றோர் எவரோ அருளிச்செய்த மேலைச் செய்யுளிற் குறிப்பிடப்பட்ட ‘வேதம்,’ ‘ஆகமம்’ என்பன இன்னமொழியில் உள்ளன என்பது ஆண்டுச் சொல்லப்படவில்லையாயினும், அவை இரண்டும் வடமொழியிற்றான் உள்ளன, தமிழில் இல்லையென்றார். எத்தகைய வழக்கிற்குஞ் சான்று தேடுந்தொழிலை இவர் மேற்கொண்டிருப்பவராதலால், இவர் தாஞ் சொல்லும் இக் கூற்றுக்குஞ் சான்று காட்டுவாரென நம்பி நோக்கினேம்; ஆனல், இவர் அதற்குச் சான்று காட்டுதலை விடுத்து, இஞ்ஞான்றை ஆராய்ச்சிக்காரர் சிலர் ‘வேதமும் ஆகமமுந் தமிழிலிருந்தன; அவற்றை வடநூலார் மொழிபெயர்த்து அப்பெயர்களை இட்டனர்’ என்னுங் கொள்கை இவ்வழக்கினும் நுழைந்துவிட்டதே யென வருத்தப்படுகின்றார். முழுமுதற்கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியும், அக்கடவுளை வழிபட்டு உயிர்கள் உய்யும் வகைகளும், இவ்விரண்டுக்குங் கருவியாவனவும் வகுத்துரைக்கும் வீட்டு நூல்களையே ‘மறை,’ ‘வேதம்,’ ‘ஆகமம்’ என்னும் பெயர்களால் ஆன்றோர் வழங்கி வருகின்றனர். எல்லாம்வல்ல இறைவனாற் படைக்கப்பட்ட மக்கள் நமது இந்தியநாட்டில் மட்டுமன்றி, இதற்குப் புறம்பான எல்லா நாடுகளினும் இருக்கின்றார்கள். தமிழர், ஆரியரைப்போலவே புறநாட்டிலுள்ளாருள்ளும், அறிவாற்றல் நாகரிகங்களாற் சிறந்து இறைவனருளை வேண்டி வழுத்தின விழுமிய மக்கள் எகுபதி, அசீரியா, சாலடி, ரோம், கிரீசு, பாரசிகம், சீனம், மெக்சிகோ, பேருமுதலான நாடுகளிற் பல்லாயிர ஆண்டுகட்கு முற்றொட்டே வாழ்ந்துவருகின்றனர். இம்மக்களின் பழைய வரலாறுகளைப் பயில்வார் எவர்க்கும், அவர்களின் நாகரிகச்சிறப்பும், அவர்கள் இறைவன்பால் அன்புவைத்து எழுதிய வணக்கவுரைகளும், இறைவன் அவர்கட்குச் செய்யும் அருட்டிறங்களும் நன்கு புலனும். அம்மக்கட் பகுப்பினரின் மிகப்பழைய நாகரிகத்தினை நாட்டுதற்கு மறக்கப்படாத சான்றுகள் கிடைக்குமாறு போல், தமிழர், ஆரியர் நாகரிகத்தினை நாட்டுதற்கு அத்துணைச்சிறந்த பழஞ்சான்றுகள் கிடைத்திலாமையின், வரலாற்று நூலாசிரியர்கள் அவ் அயல்நாட்டு மக்களின் பழஞ்சிறப்பினை மிக வியந்து பாராட்டுவர். இங்ஙனமாக மிகப்பழைய காலத்திலேயே இறைவன் திருவருட்பேற்றிற் குரியராய்ச்சிறந்து நின்ற அவ் அயல்நாட்டவர், முழுமுதற் கடவுள் ஒருவனையே வழுத்திப்பாடிய பாடல்களும், அவர் ஆராய்ந்தறிந்த அரும்

(தொடரும்)